பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆடி 29 புதன்கிழமை 14.08.2019 | கதிர் 282

### இனி இது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு தொடர்பில் விவகாரம் பிரதமர் ரணிலைப் பொறுத்தவரை வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டதாகப் பலரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ரணிலோ 'மிஸ்டர் கூல்' ஆக பக்கம் 02



# இந்தியா, மேற்கு நாடுகளுக்கு இசையும் ஒருவரை கூட்டமைப்பும் விக்னேஸ்வரன் தரப்பும் ஆதரிக்கும்

## தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை ஆராய்ந்தே முடிவு செய்வோம் என்று அவர்கள் கூறுவது நம்மை முட்டாளாக்கும் கதை என்கிறார் கஜேந்திரன்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம்,ஓக.14

இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் நலன்களுக்கு இயைந்து கொடுக்ககூடிய ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார். அத்தகையவருக்குப் பூரணமான ஆதரவை வழங்குவதற்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், சி.வீ.விக்னேஸ்வரன் தரப்பும் தங்களுடைய இணக்கங்களை வெளிப்படுத்தியிருக்கும் நிலையில், தமிழ் கட்சிகள் கூடி தமிழ் மக்களின் நிலைப்பாடு பக்கம் 15

# தீர்வுக்கு இணங்குபவருக்கு ஈ.பி.டி.பியின் முழு ஆதரவு!



## டக்ளஸ் தேவானந்தா நேற்று அறிவிப்பு ஆனாலும் இன்னும் முடிவு இல்லையாம்

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்,14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாருக்கு ஆதரவை வழங்குவது என்பது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இதுவரையில் முடிவு எதனையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்திருக்கும் அக்கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யார் இணங்கி அந்த நம்பிக்கையை மக்களுக்கு வழங்குகின்றாரோ அவருக்கே ஆதரவை வழங்க முடியுமென்றும் குறிப்பிட்டுள்ளார். பக்கம் 11

## வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய போட்டியிடாராம்!

### அடித்துக் கூறுகின்றார் ஆஸாத் சாலி



கொழும்பு, ஓக.14

என்னைப் பொறுத்தவரையில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டார் என நான் அடித்து கூறுகின்றேன். பக்கம் 11

## அ'புரம் மகாபோதியில் கோட்டாபய வழிபாடு



அநுராதபுரம், ஓக.14

ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ , நேற்றுக் காலை அநுராதபுரம் மகாபோதியில் வழிபாடுகளில் பக்கம் 11

## ஐ.நாவின் கூட்டத்துக்காக அமெ. செல்கிறார் மைத்திரி

### உலகத் தலைவர்களுடன் விசேட சந்திப்புகள்



ஐக்கியநாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அமெரிக்காவுக்கு அடுத்த மாதம் செல்லவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு உலக பக்கம் 11

## ராஜபக்ஷக்களின் தரப்பிடம் ஆட்சியை ஒப்படையோம்!

### அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார சூளுரை



பதுளை,ஓக.14

2015ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றி ஜனநாயகத்தை அனைவருக்கும் பொதுவுடமையாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ பக்கம் 11

## அமைச்சரவை நேர்த்துடன் கூடுவதால் ஐந்து அல்லது ஆறு பேரே பிரசன்னமாம்

அமைச்சரவை கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக் காலை 7.30 மணிக்கு ஆரம்பமான போது, ஐந்து அமைச்சர்கள் மாத்திரமே கூட்டத்துக்கு வந்திருந்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தூர இடங்களில் இருந்து வரும் அமைச்சர்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தை கருத்தில் கொண்டு அமைச்சரவை கூட்டத்தை முற்பகல் 8.30 மணிக்கு நடத் பக்கம் 11

## ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் நாளை இலங்கைக்கு வருகின்றார்



மத அல்லது நம்பிக்கை சுதந்திரம் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் அகமட் கீட் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள பக்கம் 11

## நல்லூர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ராணுவக் கெடுபிடி வேண்டவேண்டாம்!

### வலியுறுத்திக் கோருகின்றது ரெலோ



நல்லூர் முருகன் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளில் இராணுவக் கெடுபிடி வேண்டவேண்டாம் எனக் கோரியிருக்கின்றது தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ அமைப்பு).

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் பக்கம் 11

## நல்லூரில் மூன்று முஸ்லிம் இளைஞர்கள் கைதாகி விசாரணைகளின் பின் விடுவிப்பு

நல்லூர், ஓக.14

நல்லூர் கந்தசுவாமி ஆலய வளாகத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மூன்று முஸ்லிம் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப் பக்கம் 11



# கோட்டாவைக் கொடூரமானவராக சித்திரிக்கின்றதாம் கூட்டமைப்பு!

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ கொடூரமானவர் என்று தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பே தற்போது தனது அரசியல் தேவைகளுக்காக சித்திரிக்கின்றது என இராணுவத் தினரின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

'ஓர் இனத்தின் தேவைகளுக்காக மாத்திரம் 30 வருட கால சிவில் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப் படவில்லை. யுத்தத்தில் தமிழ் மக்கள் உட்பட அனைத்து இன மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டார் கள். யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர வேண்டிய தேவை தமிழ் மக்கள் மத்தியிலும் காணப்பட்டது. யுத்த சூழலின் போது விடுதலை புலிகள் தமிழ் மக் களைத் தங்களின் பாதுகாப்பு கேடயமாக பயன்படுத் திக்கொண்டே இராணுவத்தினரை எதிர்கொண்டார்கள். விடுதலை புலிகளின் பிடிக்குள் அகப்பட்ட தமிழ் மக்களை இராணுவத்தினரே பாதுகாத்தார்கள் என் பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.



யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் ரீதியிலான உரிமைகள் வடக்கு மக்களுக்கு கடந்த அரசாங்கத்தினால் மாகாண சபை தேர்தலின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட் டன. அந்த உரிமைகளைக் கூடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தக்கவைத்துக் கொள்ளவில்லை. – என்றும் அவர் கூறினார்.

# மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு சட்ட வாய்ப்புகள் ஏதேனும் உள்ளனவா?

## உயர்நீதிமன்றத்திடம் பரிந்துரை கோருகின்றார் ஜனாதிபதி



எல்லை நிர்ணய அறிக்கை முன்வைக்கப் பட்டில்லாத சந்தர்ப்பத்தில் மாகாண சபைத் தேர் தலை நடத்த இடப்பாடு உள்ளதா என்பது குறித்து சட்ட விளக்கம் கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்ட மனு குறித்த விவாதம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள் ளப்படவுள்ளது.

இது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மா னம் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஜனா திபதிக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

ஜனாதிபதியின் இந்த மனுவுடன் தொடர்புடைய எழுத்து மூல சட்ட விடயங்கள் காணப்படுவதாயின் அதனை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு உயர் நீதிமன்றத்தினால் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் கோரப்பட் டுள்ளது.

பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான இடர்பாடுகள் உள்ளனவா என ஜனாதிபதி இந்த மனுவில் நீதி மன்றத்தைக் கோரியுள்ளார் எனவும் கூறப்படு கின்றது.

# சிங்களத் தலைவர்கள் தமிழரின் பிரச்சினைகளை தேடிப் பார்க்காவிடின் பாரிய பிரச்சினைகள் வரும்

## நவீன் திஸநாயக்கா எச்சரிக்கை

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகலஹரத்துக்களையும்தமிழ்மக் களுக்கு வழங்க வேண்டும் என் பதே தனது தனிப்பட்ட விருப்பம் எனப்பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் கோரிக்கை கள்தொடர்பில் சிங்களத்தலைவர் கள் தேடிப் பார்க்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அவ்வாறு சிங்கள தலைவர் கள் தமிழர்களின் பிரச்சினை களைத் தேடிப் பார்க்காவிடின், எதிர்காலத்தில் பாரிய பிரச்சினை களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் எனவும் அமைச்சர் நவீன் திஸநாயக்க குறிப்பிட்டுள் ளார்.

# ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஐ.ம.சு.மு. இருக்கும்

## துமிந்த திஸாநாயக்க பெருமிதம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் ஆதரவு இல்லாமல் 2020 இல் ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்ய முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைக் கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை தீர்மானிக்கும் சக்தியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இருக்கும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும், சுதந்திரக் கட்சியின் ஆத ரவு இல்லாமல் ஜனாதிபதியை தெரிவு செய்ய முடியாது.

அதேசமயம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால், சுதந்திரக் கட்சியைக் கட்டுப்படுத்த முடியாது. – எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# எரிபொருள்கள் விலை உயர்வு

விலைச் சூத்திரத்துக்கு ஏற்ப நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் களின் விலை அதிகரிக்கப்படுவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

ஒக்டேன் 92 ரகப் பெற்றோல் லீற்றர் 136 ரூபாவிலிருந்து 138 ரூபாவாகவும் –

ஒக்டேன் 95 ரகப் பெற்றோல் லீற்றர் 159 ரூபாவிலிருந்து 163 ரூபாவாகவும் –

சுப்பர் டீசல் லீற்றர் 131 ரூபாவிலிருந்து 134 ரூபாவாகவும் – விலை அதிகரித்துள்ளது.

ஓடோ டீசலின் விலை மாற்றமின்றி லீற்றர் 104 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுதலாக – பொறுமையாக – விடயங்களைப் பார்த்திருக்கின் றார். அதை நோக்கும் மற்றவர் கள்தான் ஆச்சரியத்தில் மூழ்கிப் போய்த் திகைத்து நிற்கின்றனர்.

அதிகம் அலட்டிக் கொள்ளா மல் அமைதியாகச் செயற்படும் ரணிலின்அரசியல் நரித் தந்திரப் புத்தி பலருக்கும் நன்கு தெரி யாததைதான் இந்த ஆச்சரியங் களுக்குக் காரணம்.

ரணிலின் மாமனார் முன் னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜென வர்த்தன. அவர் அரசியலில் 'கிழட்டு நரி' என வர்ணிக்கப்பட்ட வர். அவரிடம் அரசியலை அரிச்சு வடியிலிருந்து பாடம் கற்றவர் ரணில். அதே நரித்தந்திரம் ரணி லிடமும் உண்டு.

இருவரிடமும் ஓர் ஒற்றுமை இருப்பதை நண்பர் ஒருவர் சுட் டிக்காட்டினார்.

டி.எஸ்.சேனநாயக்கா 1952 மார்ச்சில் காலமானபோது அவ ரது அமைச்சரவையில் முக்கிய மந்திரி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. அச்சமயம் அடுத்த பிரதமர் பதவிக்கு டட்லி சேனநாயக்காவு டன் போட்டியிட்டார் ஜே.ஆர்.ஜெய வர்த்தன.

பாவம். அப்போது அவருக்கு அந்தத்தலைமைத்துவம் கிடைக்க வில்லை. கடைசியாக அவர் நாட் டில் தலைவரானது 1977இல். இருபத்தியைந்து வருடங்கள் அதற்குக் காத்திருக்க வேண்டிய வரானார் அவர்.

அது போல, டி.பி.விஜேதுங்க ஜனாதிபதிபதவியைவிட்டுஇறங்க, அந்த ஜனாதிபதித் தேல்தலில் களமிறங்கிய காமினி திஸ நாயக்கா குண்டு வெடிப்பில் உயி ரிழந்தார். அப்போது, 1995 இல், ஐ.தே.க. தலைவர் பதவியை ஏற்ற ரணில் நாட்டின் ஜனாதிபதி யாக – தலைவராக – இன்னும் வரவில்லை. இப்போது 25ஆவது வருடம். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வுக்கு 25 வருடங்கள் கழித்து அது கிட்டியது போல, அவரது மருமகன் ரணிலுக்கும் 25 வரு டங்கள் இப்போது பூர்த்தியாகும் சமயத்தில் அது கிட்டுமா என் பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கடந்த இரண்டு, மூன்று தினங் களாக ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர் கள் பிரதமர் ரணிலைச் சந்தித்து வருகின்றனர்.

அவர்களில் கணிசமானோர் சஜித் பிரேமதாஸாவை ஜனாதி பதி வேட்பாளராக நிறுத்தும்படி ரணிலுக்கு நேரடியாகவே அழுத் தம் கொடுத்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன தனது வேட்பாளராகக் கோட்டாபயவைக் களமிறக்கி விட் டது. அவருக்கு நிகராகப் போட்டி யிடக் கூடியவர்கள் சஜித் அல்லது சரத் பொன்சேனாதான் என்றும், ரணிலோ அல்லது கரு ஜெயசூரி யவோ அல்ல என்றும் அவர்கள் கூறுகின்றனராம்.

இதில் சரத் பொன்சேகா ஏற் கனவே தேர்தலில் போட்டியிட்டு பெரிய வாக்கு வித்தியாசத்தில் தோற்றவர். ஆகவே கோட்டாபய வுக்கு சமதையாக சஜித்தை வேட்பாளராகக் களமிறக்குங்கள் – என்றும் அவர்கள் வற்புறுத்து கின்றனராம்.

அவர்கள் எவருடனும் கருத்து மோதல்களில் ஈடுபடாமல், 'அப் படியா?', 'நல்லது', 'அது போலவே செய்வோம்!' – என்று சேர்ந்து பாடுகிறாராம் ரணில் என்கின் றன விடயமறிந்த வட்டாரங்கள்.

கடைசியில் –

“எது, எப்படி என்றாலும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாள ரைத் தேர்வு செய்வது கட்சியின் மத்திய செயற்குழுவின் பொறுப்பு. அங்கு வந்து இந்த விடயங் களைக் கூறுங்கள். மத்திய செயற் குழு ஆராய்ந்து முடிவெடுக்கட் டும். மத்திய செயற்குழு என்ன முடிவெடுத்தாலும் நானும் அதற்கு ஓ.கே...” – என்று பதில் கூறி பலரையும் வியப்பில் ஆழ்த்து கிறார் பிரதமர் ரணில்.

ஆனால் வியப்பில் மூழ்கு வோருக்கு ஒரு விடயம் தெரிய வில்லை. கட்சியின் மத்திய செயற் குழுவுக்கு ஐ.தே.க. பிரமுகர்களி டையே ஆள்களைத் தெரிவு செய்து நியமித்தவரே ரணில் தான். அங்கு தனது கைதான் எப் போதும் ஓங்கிநிற்கும் என்பதுரணி லுக்கு நன்கு தெரியும். அதனால் தான் சஜித்துக்கு ஆதரவாக ஆர வாரம் பண்ணுவோரை எல்லாம் தமது கடைக்கண்ணால் பார்த்தபடி வாளாவிருக்கின்றார் ரணில்.

ஜனாதிபதி வேட்பாளராகக் கட்சி யின் மத்திய செயற்குழு தன்னை (ரணிலை) தெரிவு செய்து அறி வித்த பிறகே தனது மௌனத்தைக் கலைத்துச் சுயரூபத்தைக் காட்டும் திட்டத்தில் இருக்கிறாராம் ரணில்.

தந்திரசாலி ரணில் அமைதி பேணுவதில் புதைந்திருக்கும் உள்சூக்குமம் இதுதான்.

- மின்னல் -




YOGIS

Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt) Ltd



குறுகிய கால அழகுக்கலைப் பயிற்சிகள், கேக் ஐசிங் பயிற்சிகள்

புதிய வகுப்புக்கள் 17.08.2019 ஆரம்பமாகவுள்ளன.

சேர விரும்புவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.



மகளிருக்கான GYM Exercise நடைபெறுகிறது.

இல. 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே: 077 716 4923, 021 222 2796

# போர் நஷ்டங்களை ஈடுசெய்யவே அரசு வடக்கு, கிழக்கில் கம்பெரலிய திட்டம்!

## இப்படி விளக்குகின்றார் முன்னாள் முதல்வர் விக்கி

**கொழும்பு, ஒக்.14**
**போரினால் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடுசெய்யவே அரசாங்கம் வடக்கு, கிழக்கில் கம்பெரலிய திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதாக முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வட்டுக்கோட்டை, அராலி மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆட்சியில்உள்ளவர்கள் தமிழர்களின் உரிமைகள் பற்றி சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை. தமிழ் அரசியல் தலைமைகள் சலுகைகளைஎதிர்பார்த்து, நிபந்தனைகள் எதுவுமற்ற ஆதரவை அரசாங்கத்திற்கு வழங்கி, அதன் இருப்பை உறுதிப்படுத்திவருகின்றன.

வடமாகாணசபையின்முதல்வராக இருந்த போது, ஒரு சதம் காசைக் கூட மத்திய அரசுக்கு நான் திருப்பி அனுப்பவில்லை. எனது அரசியற் பிரவேசம் சுயநலம் கருதியது



அல்ல. மாறாக நீதியின்பால், நேர் வழி நின்று, மக்கள் சேவை செய்வதேயாகும்.

எனது கொள்கையுடன் ஒத்து செயற்படக் கூடியவர்களை மாத்திரம் இணைத்துக்கொண்டு பயணிக்கிறேன். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய மக்கள் சக்தி' கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார!



கொழும்பு, ஒக்.14

ஜே.வி.பி. தலைமையிலான 'தேசிய மக்கள் சக்தி'கூட்டணியின்ஜனாதிபதி வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்கவே களமிறங்கவுள்ளார் என அக்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் 18ஆம் திகதி வெளியாகவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து தேசிய மக்கள் சக்தி என்ற பாரிய கூட்டணியை ஜே.வி.பி. உருவாக்கியுள்ளது . பல சிவில் அமைப்புகள் இக்கூட்டணியில் சங்கமித்துள்ளன.

தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் முதலாவது தேசிய கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது.

இதன்போதே ஜனாதிபதி வேட்பாளராக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் பெயர் முன்மொழியப்பட்டு அது தொடர்பான தீர்மானம் அங்கு நிறைவேற்றப்படவுள்ளது.

# சல்வார் தாவணி கழுத்தில் இறுகி 8 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

வவுனியா, ஒக்.14

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் சல்வார் தாவணியில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் கழுத்தில் தாவணி இறுகி 8 வயது சிறுவன் ஒருவன் நேற்று மதியம் மரணமடைந்துள்ளான்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-



வவுனியா, செட்டிகுளம், முகத்தான்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் சகோதரனுடன் சல்வார் தாவணியில் ஜன்னல் ஊடாக கழுத்தில் கொழுவி விளையாடிக் கொண்டிருந்த போது அந்தத் தாவணி இறுகியதில் 8 வயது சிறுவன் சிக்கிக் கொண்டுள்ளான். சல்வார் இறுகியதும் அவனின் 5 வயதுச் சகோதரன் கூச்சலிட்டு தனது மற்றைய சகோதரன் மற்றும் உறவினர்களின் உதவியுடன் சிறுவனை மீட்ட போதும் அது பயனளிக்கவில்லை. சிறுவன் அந்த இடத்திலேயே மரணமடைந்து விட்டான் எனக் கூறப்படுகின்றது. அந்தச் சிறுவனின் சடலம் செட்டிகுளம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் சசிதரன் கிருசான் (வயது 8) என்ற சிறுவனே மரணமடைந்துள்ளான். அந்தச் சிறுவனின்




தந்தையார்கொலைக் குற்றச்சாட்டு ஒன்று தொடர்பில்2015ஆம் ஆண்டுமுதல்மரண தண்டனை கைதியாக கண்டி போகம்பர சிறைச்சாலையில் உள்ள நிலையில் சிறுவன் தனது தந்தையாரை இவ்வாறு தான் தூக்கில் போடு என கழுத்தில் இறுக்கி பல தடவை வினவியதுடன், தந்தையார் தொடர்பில் மன அழுத்திற்கு உள்ளாகியிருந்தான் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் தீவிர விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

# வடகடல் நிறுவன ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்













யாழ்ப்பாணம், ஒக.14

தேசிய கொள்கைகள் புனர்வாழ்வு, மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் நடவடிக்கைக்கு எதிராக, வடகடல் நிறுவன ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்., குறிப்பாக கடந்த முப்பது வருடகாலமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்த வடகடல் நிறுவனமானது நல்லாட்சி அரசாங்கத்தினால் அபிவிருத்தி செய்யப்படாது பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்த நிறுவனத்தில் 79 தொழிலாளர்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பணியாற்றி வருகின்றனர்.

வடக்கில் ஒரேயொரு அரச தொழில்பேட்டையாக வடகடல் நிறுவனம், பிரதமர் அமைச்சின் கீழ் தற்போது உள்ளபோதிலும் இன்றுவரை எந்தவொரு நிதி ஒதுக்கீடும் இல்லாது காணப்படுவதாக இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பணியாளர்கள் தெரிவித்தனர்.

இதன் போது அவர்கள் " எமது காணியை அபகரிக்காதே, பனை நிதியத்திற்கு ஒதுக்கிய நிதி எங்கே போனது," ;" ஏமாற்றாதே ஏமாற்றாதே வடக்கில் நிறுவனப் பணியாளர்களை ஏமாற்றாதே; வடகடல் நிறுவனம் வடக்கு மக்களுக்கு இல்லையா போன்ற வாசகங்கள் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கோட்டா – ரணில் இடையே உடன்பாட்டுக்குப் பேச்சாம்!

## கொழும்பு ஊடகம் இவ்வாறு தகவல்



ஐக்கியதேசியகட்சியுடன்இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பது குறித்து, கோட்டாபய ராஜபக்ஷவும் அவருக்கு நெருக்கமானவர்களும் பேச்சுக்களை நடத்த ஆரம்பித்துள்ளனர் என 'கொழும்பு டெலிகிராவ்' செய்தி வெளியிட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதிவேட்பாளராக கோட்டாபய அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களில் இந்த முயற்சி ஆரம்பமாகி விட்டதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலிற்கு பின்னர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பது குறித்து கோட்டாபய ராஜபக்ஷ சிந்தித்து வருகின்றார் . ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றால் நாடாளுமன்றத்தை 2020 பெப்ரவரியில் கலைக்கலாம் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய கருதுகின்றார், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவது குறித்த பேச்சுகள் இடம்பெறுகின்றன. இனி நடைபெறக் கூடிய நாடாளுமன்றத் தேர்தலிற்கு பின்னரும் இதனைத் தொடரும் எண்ணம் காணப்படுகின்றது எனவும் ஆங்கிலஇணையம்தெரிவித்துள்ளது.

இதற்கானவாய்ப்புகள் இன்னமும் வெகுதொலைவில் உள்ள போதிலும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் பிரதமருக்கும் இடையிலான புரிந்துணர்வு அதிகரித்து வருவதாகவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

கோட்டாபயராஜபக்ஷவின் ஜனாதிபதி கனவுகளிற்கு பிரதமரும் திலக் மாரப்பன சாகல ரத்நாயக்கவும் சிறந்த முறையில் உதவி வருகின்றனர் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

northern PC Park

வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna

கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்

www.pcpark.co
info.pcpark.co

Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## எது உண்மையான ஒற்றுமை?

ஆயுதப் போராட்டத்தில் பின்னடைவைக் கண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் இன்றைய பலம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*"எம்மிடம் இப்போது இரண்டு பலம் உள்ளது. ஒன்று – ஒற்றுமை; மற்றது – சர்வதேசத்திலிருந்து கொடுக்கப்படும் பலம். இந்த இரண்டு பலமும்தான் எம்மிடம் உள்ளன. ஆயுத பலம் இன்று இல்லை."* – இவ்வாறு சுட்டிக்காட்டும் சுமந்திரன், இன்னொரு கசப்பான உண்மையையும் குறிப்பிடுகின்றார். விரும்பியோ, விரும்பாமலோஅதை ஒப்புக் கொண்டேயாக வேண்டியிருக்கின்றது.

*"எமக்கு இன்று ஆதரவளிக்கும் நாடுகள்தான் முன்னர் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகத் தடை விதித்தன. இன்னும் அந்த நாடுகளில் புலிகளுக்குத் தடை உள்ளது. ஆனால் அதே நாடுகள் எமக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன. அதற்குக் காரணம் உண்டு. நாம் எதைச் செய்யக் கூடும், எதைச் செய்யக் கூடாது என்பதைப் புரிந்து செயற்படுகின்றமையினாலேயே அவர்கள் எம்மை ஆதரிக்கின்றார்கள்."* – என்று விளக்கமளிக்கின்றார் சுமந்திரன்.

விடுதலைப் புலிகள் முன்னெடுத்தது மறவழி. ஆயுதப் போராட்ட வழி. அதை சர்வதேச நாடுகள் பலவும் 'பயங்கரவாதம்' எனத் தவறாக அர்த்தம் பண்ணிக் கொண்டமையால் – கற்பிதம் பண்ணியமையால் – அந்த நிலைமை. நாம் அனைவரும் அறிந்த விடயம்தான் அது.

இந்த விவகாரங்களைப் பற்றிக் குறிப்பிட்ட சுமந்திரன் இன்னொன்றையும் மேலோட்டமாகத் தொட்டுச் செல்கின்றார்.

*"நம் மத்தியில் 36 போராட்டக் குழுக்கள் இருந்த போதும் இன்றைக்கு இருப்பதைப் போன்ற ஒற்றுமை இருக்கவில்லை."* – என்று தற்போதைய நிலைமை குறித்து அவர் சிலாகித்துக் கூறுகின்றமையை எடுத்த எடுப்பில் விமர்சிப்பதற்கு நாம் முயலவில்லை.

ஆனால் ஆயுதப் போராட்டத்துக்கும் ஜனநாயக ரீதியான அரசியல் அணுகுமுறைக்கும் உள்ள பாரிய வேறுபாட்டை – வித்தியாசத்தை – இடைவெளியை – அவர் புரிந்து கொள்வாராயின் இந்த விமர்சனம் வந்திருக்காது என்று நாம் நம்புகிறோம்.

இராணுவ ரீதியான மறவழிப் போராட்டத்தில் ஆயுதங்கள் தாம் பலம். ஆயுதங்களைப் பெறுவதற்கும் சுவீகரிப்பதற்குமான ஒரு போராட்டமே, பெரிய முழுப் போராட்டத்தில் ஒரு முக்கிய அங்கமாகக் கட்டவிழக் கூடியது.

இராணுவக் கட்டமைப்பு ஒழுங்கில் பல்வேறு இராணுவக் குழுக்களும், குழுமங்களும் ஒத்திசைந்து இயங்குவது என்பது யதார்த்தத்தில் மிக நெருக்கடியானதும், சிக்கலானதும், முரண்பாடுகளைத் தரவல்லதும் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே. அதுவே ஈழ விடுதலைப் போராட்டத்தில் பல மட்டங்களிலும் பல்வேறு காலகட்டங்களிலும் கட்டவிழ்ந்தது என்பது நமது அனுபவப் பாடம்.

ஆனால், ஜனநாயகப் போராட்டத்திலே, வெகுசன எழுச்சியிலே – ஆயுதமாக அமைவது ஒற்றுமைதான். ஐக்கியப்பட்ட சக்தியாக எழுவது ஒன்றே ஜனநாயகப் பலத்தை நமக்குத் தரும். அந்த ஜனநாயகப் பலமே சர்வதேச ஆதரவுத் தளம் என்ற பலத்தையும் ஈட்டித் தரவல்லது.

ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்திலே வலிமையைத் தரக் கூடிய ஆயுதங்களை – சர்வதேசமே மூக்கில் விரலை வைக்கும் அளவுக்கு – புலிகள் திரட்டிக் காட்டினார்கள். அந்த ஆயுதங்களைத் தூக்கிப் போராடுவதற்கு போதிய போராளிகள் இல்லாத நிலைமையைக்கூட நாம் கண்டோம்.

ஆனால், ஜனநாயகப் போராட்டத்திலே வலிமையைத் தருகின்ற ஒற்றுமை என்ற பலத்தை தமிழரின் ஜனநாயகப் பிரதிநிதித்துவ சக்தி எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் கூட்டமைப்பு எவ்வளவு தூரம் பெருக்கிக் கொண்டது? அந்த ஒற்றுமையை வளர்த்தெடுத்து, நமது பலத்தை பல மடங்காக்கும் விவகாரத்தில் கூட்டமைப்புத் தலைமை எவ்வளவு தூரம் நெஞ்சுக்கு நீதியாக நடந்து கொண்டது? தங்கள் தங்களுக்கும் தங்களைச் சார்ந்தோருக்கும் ஜனநாயக முறைமையின் கீழ் பதவிகளை ஈட்டிக் கொள்வதில் மட்டும் தானே கூட்டமைப்பின் தலைவர்கள் என்று கூறிக் கொள்வோர் அவதானம் செலுத்தினர், செலுத்துகின்றனர் என்று குறிப்பிடுவதை அவர்களால் மறுக்க முடியுமா?

'ஒற்றுமையே பலம்' என்றால் – 'ஐக்கியமே முக்கியம்' என்றால் – அதை நிலைநிறுத்தும் நோக்கத்திற்காக சம்பந்தன், மாவை போன்றோர் பல தசாப்தங்களாக நாடாளுமன்றக் கதிரையை சூடேற்றி, தேர்தல்தோறும் 'பஜரோக்களை' சம்பாதிக்கும் தமது வருமான ஈட்டத்தை இம்முறை கொஞ்சம் நிறுத்தி, மற்றவர்களுக்கும், பிற தரப்புகளுக்கும் இடமளித்து, அவர்களையும் உள்வாங்கி, உண்மையான ஒற்றுமையை நிலைநிறுத்த வழி செய்வார்களா?

ஒற்றுமையே பலம் என்று பேசும் சுமந்திரன் இதனை அவர்களிடம் ஒரு தடவை கேட்டு தமிழ் மக்களுக்கு கூறுவாரேயானால், உண்மையான ஒற்றுமைக்கு சில சமயங்களில் சந்தர்ப்பம் வாய்க்கக் கூடும்.

# தமிழர்களை நட்டாற்றில் தவிக்க விட்டு தமிழரசு பாரம்பரிய நட்புக் கட்சியான ஐ.தே.கவுடன் உறவு

## காட்டமாகச் சாடுகின்றார் சிவசக்தி ஆனந்தன்



அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் நழுவவிட்டு விட்டு, இன்று தங்களது பாரம்பரிய நட்புக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவாடத் தொடங்கிவிட்டது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

வன்னி மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஊடகமொன்றின் கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்துவரும் நிலையில் உங்களது நிலைப்பாடு என்ன? – என்று அவரிடம் வினா எழுப்பப்பட்டது. அதற்கு அவர் கூறிய பதில் வருமாறு:-

இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்த அனைத்து கட்சிகளுமே எமது தேசிய இனப் பிரச்சினைக்குச் சரியான தீர்வை முன்வைக்காதமையுடன், எமது அடையாளத்தையே இல்லாமல் செய்யும் போக்கையே கடைப் பிடித்து வருகின்றன.

கடந்தமுறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுத்தேர்தலும் இந்நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனையற்ற ஆதரவு அந்த வாய்ப்பைக் கைநழுவச் செய்துவிட்டது. புதிய அரசமைப்பு வரப்போவதாகக் காரணம் காட்டி, தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதியைக்கூட கிடைக்காமல் செய்துவிட்டனர்.

அரசாங்கத்தை வழிக்குக் கொண்டுவருவதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் நழுவவிட்டு விட்டு, இன்று தங்களது பாரம்பரிய நட்புக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவாடத் தொடங்கிவிட்டனர். மக்கள் நலனை விட கட்சியின் நலனே முக்கியமானது என்ற நிலைப்பாட்டுக்கு இலங்கை தமிழரசுக் கட்சி தான் மட்டும் வராமல், கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளையும் இணங்க வைத்துள்ளது.

இரண்டு கட்சிகளும் ஆட்சியில் இருக்கின்றமையால் எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வழியேற்படும் என்று தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர், மஹிந்தவைக் காரணம் காட்டி அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கக் கூடாது என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் கட்சியைவிட்டு வெளிவந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்ற மைத்திரிபால சிறிசேன மஹிந்தவுடன் இணைந்த பொழுது அவரைப்பதவிக்குக்கொண்டுவந்தவர் என்ற அடிப்படையில் அவருக்கு அழுத்தம் கொடுத்து அவரது செயலைத் தடுத்து நிறுத்த சம்பந்தன் தவறிவிட்டார். பின்னர் நீதிமன்றத்தினூடாக ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பகிரங்க உறவு வைத்தார்.

இவர்களின் தவறான வழிநடத்தல் தமிழ் மக்களை இன்று நட்டாற்றில் விட்டுள்ளது. புதிய அரசமைப்பிற்கான வரைவு நாடாளுமன்றத்தில் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் அது மேலும் முன்னெடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுகின்றன. புதிய அரசமைப்பில் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அம்சங்கள் உள்ளடக்கப்படுமா என்பது வேறு விடயம்.

தமிழ் மக்களுக்குக் கொடுத்த எந்தவொரு வாக்குறுதியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றவில்லை என்பதுடன் தீர்த்துவைத் திருக்கக்கூடிய அன்றாட பிரச்சினைகளைக் கூட தீர்ப்பதற்கு முயற்சிக்கவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.


1981ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலின்போது இளைஞர்கள் 'கேட்டது தமிழீழம்; கிடைத்தது மாவட்டம்' என்று பெரிய வட்டத்தை சுவர்களில் வரைந்து தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்கள். அதைப் போலவே இன்று 'கேட்டது சமஷ்டி கிடைத்தது கம்பெரலிய' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நடவடிக்கையை கேலி செய்கின்றனர்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பல தரப்பினரும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கத் துடித்திருந்த வேளையில், சம்பந்தனின் வேண்டுகோளை ஏற்று, தமிழ்த் தேசிய இனம்வரலாறு காணாத வகையில் வாக்களித்து பதினாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உருவாவதற்கு வழியேற்படுத்தியிருந்தது. இந்த அபரிமிதமான அரசியல் சக்தியைப் பயன்படுத்தி, தமிழ்த் தேசிய இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்து, இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கண்டிருக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கடமையிலிருந்து தவறியிருக்கிறது. இதனைச் சுட்டிக்காட்டியே நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்று தெரிவித்தோம்.

இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழர் ஐக்கிய முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய அனைத்திலும் பெயர்தான் மாறியிருக்கின்றனவே தவிர, இவற்றில் தமிழரசுக் கட்சியே முன்னணி வகித்தது. இந்தப் பெயர்கள் அனைத்திலுமே அது ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே நேரடியாகவும் மறைமுகமாகவும் உறவுகளைப் பேணிவந்துள்ளது. இன்று மீண்டும் தமிழரசுக் கட்சியின் பெயரிலேயே ஐக்கிய தேசியக் கட்சியுடன் நேரடியாகவே உறவு வைத்துள்ளது. இவ்வளவிற்கும் அந்தக் கட்சியின் ஆட்சியிலேயே இன்று வடக்கு –கிழக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் வரவு – செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கப்பட்டுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சி என்ற பெயருக்கும் அது இன்று செயற்படும் விதத்திற்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதை மக்கள் அறிவார்கள். – என அவர் தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி 12 ஆம் பக்கத்தில்)

## இலங்கை பற்றிய அறிக்கை மனித உரிமைப் பேரவைக்கு



ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி க்ரீப் தனது இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கையை எதிர்வரும் செப்டெம்பரில் சமர்ப்பிக்கவுள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி க்ரீப் தமது அறிக்கையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அடுத்த மாதம் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 42வது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 9முதல் 27 வரை நடைபெறவுள்ளது. இதன்போது செப்டெம்பர் 11ஆம் திகதி இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**நாளை** 15.08.2019 வியாழக்கிழமை

நட்சத்திரம்: திருவோணம் மு.ப 9.13 வரை
திதி : பூரணை மாலை 6.08 வரை
இராகுகாலம் : 1.35 – 3.05
சுப நேரம் : 7.35 – 9.05

# அனைத்துத் தமிழ்த் தரப்புக்களுடனும் இணைந்து செயற்படத் தமிழரசு தயார்!

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஓக. 14
தமிழ் மக்கள் நலனுக்காக அனைத்துத் தமிழ்த் தரப்புக்களுடனும் இணைந்து செயற்பட தமிழரசுக் கட்சி எப்போதும் தயாராகவே இருப்பதாக தெரிவித்திருக்கும் தமிரசுக்கட்சியின் துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத்தலைவருமான சி.வி.கே. சிவஞானம், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டை எடுப்பதற்கான பேச்சுக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–
நாம் தமிழ் மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் எப்போதும் ஒற்றுமையுடன் அடிப்படைத் தேவைகளை வென்றெடுக்க போராடி வருகின்றோம். தற்போது நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தமிழ்த் தரப்புக்கள் ஒருமித்து மக்களுக்கு அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க ஓர் கொள்கையை வகுக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் வருகின்றன. இதனை நாம் எப்போதிருந்தோ வலியுறுத்தி வருகின்றோம்.


கூறுகின்றார்
சி.வி.கே.சிவஞானம்

தற்போது கூட தமிழ் மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற தமிழ் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றிறிணைந்து செயற்படத் தயாராகவே இருக்கின்றோம்.

தமிழ் தரப்புக்கள் அனைத்தும் உங்கள் கொள்கைகள் உங்கள் கருத்துகளில் விலகாது தமிழ் மக்கள் நலனுக்காக ஒன்றிணைந்து மக்களுக்கு தேவையாக உள்ள அடிப்படை விடயங்களை நிறைவேற்ற பாடுபடுவோம். அதற்கு எனது கட்சி தயாராகவே உள்ளது. அதற்கான அழைப்புக்களையும் விடுக்கின்றோம் – என்றார் .

(ஐ - 07)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.14
இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தை யொட்டி நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் –

இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை **வீணை இசை** வீணை – கு.கல்யாணி, ம.ஆர்த்திகா, உ.சௌமியா, ஜெ.குணவர்சிலா, சு.ஆரணியா, ஜெ.பிரவீணா, மிருதங்கம் – எ.ஜி.எஸ்.சுவாமிநாதசர்மா, நெறியாள்கை – இந்திரா குமாரசிவம்.

7.15 முதல் 8.15 வரை **இசைக்கச்சேரி** – பாட்டு – சின்னையா சூரியகுமார், வயலின் – செ.ஜனனி, மிருதங்கம் – ம.லோகேந்திரன் தபேலா – ச.விமல்சங்கர், கடம் – அ.செல்வரட்ணம், கெஞ்சிரா – ஞா.வசந்.

## முழு நிலா கருத்தரங்கு

உரும்பிராய், ஓக.14
உரும்பிராய் ஞான வைரவர் சனசமூக நிலையத்தின் முழு நிலா கருத்தரங்கு இன்று பதன்கிழமை மாலை 5 மணியளவில் நிலையத் தலைவர் ம.ரகுநாதன் தலைமையில் நிலைய மேல் மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் ஆ.வித்தியாசாகர் "மனம் எனும் மந்திரச் சாவி" எனும் தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

சின்மயா மிஷனில் சஞ்சிகை
## சின்மய நாதம் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.14
யாழ் சின்மயா மிஷனின் காலாண்டுச் சஞ்சிகையான சின்மய நாதம் – மலர் 07 இதழ் 01 வெளியீடு நாளை வியாழக்கிழமை நல்லூர் மஞ்சத் திருவிழா அன்று மாலை 7.15 மணிமுதல் 8.00 மணிவரை இல. 700, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் சிதம்பரநடேசன் குமரேசன் தலைமையில் ஆரம்பமாக உள்ளது.

இந்நிகழ்வில், யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா ஆசியுரை வழங்குவார். வெளியீட்டு உரையை ஓய்வு நிலை வட மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. கௌரி முகுந்தன் நிகழ்த்துவார்.

முதற் பிரதியை சுவாமிஜியிடமிருந்து பிரகாந் பதிப்பக உரிமையாளர் கோபால கிருஷ்ணன் ரஜனிகாந்தன் பெற்றுக் கொள்வார்.

மகாவலி தேசியக் கல்வியியல் கல்லூரி மாணவி செல்வி. அருந்தா தர்மலிங்கத்தின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெறும்.

## நவீன் திசாநாயக்க முல்லைத்தீவு பயணம்

முல்லைத்தீவு, ஓக. 14
பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திசாநாயக்க நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார். நேற்று முன் தினம் காலை 10.30 மணிக்குப் புதுக்குடியிருப்பில் அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்த அமைச்சர், முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்து முல்லைத்தீவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தென்னை மரக்கன்றுகள் வழங்கினார்.

வடக்கையும் கிழக்கையும் எல் வலையமாக இணைத்து தென்னை பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு இடம்பெற்ற இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது 200க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு தென்னை பயிர்ச்செய்கைக்கான மானியத் தொகை வழங்கப்பட்டது. (ஐ)











## சோபா குறித்து மாரப்பனவுடன் ஆராய்ந்தாரா அலிஸ் வெல்ஸ்?

கொழும்பு, ஓக. 14
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அமெரிக்க – இலங்கை இருதரப்பு உறவுகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக, வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.


எனினும், இந்தச் சந்திப்பின் போது, சோபா உடன்பாடு மற்றும் ஏனைய இரு தரப்பு உடன்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டனவா என்று கூற வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

அதேவேளை, நேற்று முன் தினம் இலங்கையில் அமெரிக்காவின் முதலீடுகளை அதிகரிப்பது, வேலைவாய்ப்பை அதிகரிப்பது குறித்து, அலிஸ் வெல்ஸ் வணிக சமூகப் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளார். (ஐ)

## கோட்டா ஜனாதிபதியானால் நாடு நாசமாகிப் போய்விடும்

### எச்சரிக்கின்றார் சந்திரிகா

கொழும்பு, ஓக. 14
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டிருப்பது, ஆபத்தானது என்று முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் நாடு அபிவிருத்தியடையும் என்பதில் தனக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் அதிகாரத்துக்கு வந்தால், நாடு முற்றாக நாசமாகி விடும் என்றே தான் அச்சம் கொண்டுள்ளார் என்றும், சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார். (ஐ)

# நாளை இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி டில்லியில் வரலாறு காணாத பாதுகாப்பு!

**இந்திய சுதந்திர தினம் நாளை 15 ஆம் திகதி (வியாழக்கிழமை) ஆகும். சுதந்திர தினத்தை முன்னிட்டு டில்லியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. காஷ்மீர் நடவடிக்கைகளால் இந்த ஆண்டு பாதுகாப்பு படையினர் கூடுதல் உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர்.**



இந்திய சுதந்திர தினம் நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி டில்லி செங் கோட்டையில் பிரதமர் மோடி தேசிய கொடி ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். மேலும் இராணுவ அணிவகுப்பு, மாநிலங்களின் கலை நிகழ்ச்சிகள் என வண்ணமிகு நிகழ்வுகள் அரங்கேற உள்ளன.

இந்த நிகழ்ச்சியில் மத்திய மந்திரிகள், வெளிநாட்டு பிரதிநிதிகள், முப்படைத் தளபதிகள் என ஏராளமான பிரபலங்கள் பங்கேற்கின்றனர். இந்த விழாவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன். இதற்காக நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒத்திகை நிகழ்ச்சியும் நடந்தது.

இந்த ஏற்பாடுகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, மறுபுறம் சுதந்திர தின விழாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. குறிப்பாக காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து சமீபத்தில் ரத்து செய்யப்பட்டதால், அந்தக் கொந்தளிப்பு சுதந்திர தினவிழாவில் எதிரொலிக்காமல் இருக்கப் பாதுகாப்பு படைகள் கூடுதல் உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

அதன்படி தலைநகர் டில்லியில் பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. இராணுவம், துணை இராணுவம் மற்றும் டெல்லி பொலிஸாருடன் இணைந்து, தேசிய பாதுகாப்பு கொமாண்டோக்கள், சிறப்பு ஆயுத படைப்பிரிவு (ஸ்வாட்) கொமாண்டோக்கள் உள்ளிட்ட உயர்மட்ட பாதுகாப்புப் படையினர் செங்கோட்டையைச் சுற்றிப் பாதுகாப்புக்கு நிறுத்தப்படுகின்றனர்.

சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம் முழுவதும் கண்காணிப்பு கமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. வாகன நிறுத்தும் இடங்கள் அனைத்தும் டெல்லி பொலிஸார் மற்றும் துணை இராணுவப் படைகள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. வெடிபொருள்கள் மற்றும் ஆயுதங்களைக் கண்டறிய மோப்ப நாய் பிரிவு களத்தில் இறக்கப்பட்டு உள்ளது.

மர்ம நபர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் வகையில், விழா நடைபெறும் இடத்தைச் சுற்றி இருக்கும் ஹோட்டல்கள் மற்றும் குடியிருப்புகளில் டில்லி பொலிஸார் சோதனை நடத்தி உள்ளனர். செங்கோட்டை அமைந்திருக்கும் பகுதிகளில் மர்மப் பட்டங்கள் பறப்பதைத் தடுக்கும் வகையில் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர்.


இதைப்போல நாளை வரை தலைநகரில் ஆளில்லா விமானங்கள், சிறிய உளவு விமானங்கள், ராட்சத பலூன்கள், ரிமோட் விமானங்கள் போன்றவற்றை பறக்க விடுவதற்கு பொதுமக்களுக்குத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

செங்கோட்டைக்கு செல்லும் சாலைகள் அனைத்தும் கண்காணிப்பு வளையத்துக்குள்கொண்டுவரப்பட்டுஉள்ளன.

இவ்வாறு தலைநகர் முழுவதையும் கையில் எடுத்துள்ள பாதுகாப்பு படையினர் அங்கு மர்ம நபர்களின் நடமாட்டம், ஆயுதங்கள், வெடிபொருள்களின் இருப்புக் குறித்து சல்லடை போட்டுத் தேடி வருகின்றனர்.

## கேரளத்தில் நேற்று பெரும் நிலச்சரிவு 15 பேர் பலி; ஐம்பது பேரைக் காணோம்







திருவனந்தபுரம்,ஓக.14

கேரளா மாநிலத்தின் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள கவலபரா பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 15 பேர் பலியாகியுள்ளனர். இருபது குழந்தைகள் உட்பட மேலும் 50 பேரை காணவில்லை. அவர்கள் மண்ணுக்குள் புதையுண்டு போயிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

கடந்த சில நாள்களாக கேரளா மாநிலத்தில் கனமழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு இடங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. பெரும்பாலான மக்கள் பாதுகாப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை மலப்புரம் மாவட்டத்தில் உள்ள கவலபரா பகுதியில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. நிலச்சரிவின் காரணமாக 50க்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதைந்துள்ளன.

மீட்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், 15 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஓர் இராணுவ வீரர், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 சிறுமிகள் உட்பட 15 பேர் உயிரிழந்திருக்கின்றமை உறுதி செய்யப்பட்டது. மேலும் 50 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. இராணுவம், தேசிய பேரிடர் மீட்புப்படை, தீயணைப்பு வீரர்கள் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக கேரளா மாநிலத்தில் இதுவரை 88 பேர் உயிரிழந்துள்ளனர்.

கேரளாவில் பிறிதொரு மண்சரிவுச் சம்பவத்தில் நான்கே வயதான அனகா என்ற சிறுமி, தனது மைத்துனியான எட்டு வயதுடைய அலினாவை அணைத்தபடி தூங்கிய நிலையில் மண்ணில் புதையுண்டாள். இருவரின் சடலங்களும் பின்னர் மீட்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டன.

## நிலவின் சுற்றுவட்டப் பாதையை நெருங்குகின்றது 'சந்திரயான் 2'





ஆமதாபாத்,ஓக.14

இந்தியா ஏவிய 'சந்திரயான் 2' விண்கலம் வரும் 20 ஆம் திகதி நிலாவின் சுற்று வட்டப் பாதையை எட்டும் என்று இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்தார்.

இது குறித்து ஆமதாபாத்தில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் அவர் கூறியவை வருமாறு:- 'கடந்த 22 ஆம் திகதி சந்திரயான் 2 விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்ட பின் அதன் சுற்றுவட்டப்பாதையின் உயரம் 5 முறை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக இன்று புதன் அதிகாலை 3.30 மணியளவில் அதன் சுற்றுவட்டப் பாதை மேலும் உயர்த்தப்படும். நிலாவின் சுற்று வட்டப் பாதையில் விண்கலத்தை அனுப்புவதற்கான பணி முக்கியமானது. இதன் பின் புவி சுற்று வட்டப் பாதையிலிருந்து விலகி சந்திரயான், நிலவை நோக்கி பயணிக்கும். வரும் 20 ஆம் திகதி அது நிலாவின் சுற்றுவட்டப்பாதையைச் சென்றடையும். அதன் பின்பும் அதன் சுற்றுவட்டப்பாதை தொடர்ந்து உயர்த்தப்படும்.

இறுதியாக செப்டெம்பர் 7 இல் சந்திரயான் 2 விண்கலத்திலிருந்து பிரிந்து விக்ரம் கலம் நிலாவின் தென்துருவத்தில் தரையிறங்கும். விண்கலம் நல்ல நிலையில் உள்ளது அதன் செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளன.

வரும் டிசம்பரில் சிறிய செயற்கைகோள்களை ஏவுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். - இவ்வாறு சிவன் மேலும் கூறினார்.

# மியன்மாரில் கனமழையால் மண்சரிவு இறந்தோர் எண்ணிக்கை 56 ஆனது!









மியன்மார் நாட்டில் கனமழையால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டில் பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு ஊர்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்தக் கனமழை மற்றும் வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அந்நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள மோன் மாகாணத்தின் மலைப்பகுதியில் உள்ள தாப்யோ கோன் கிராமத்தில் பெய்த கனமழையால் திடீரென மண்சரிவு ஏற்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்த மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து 28 பேரை உயிருடன் மீட்டனர். ஆனாலும், 22 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் தற்போது மேலும் 34 உடல்களை மீட்பு குழுவினர் கண்டுபிடித்தனர். இதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டில் மழை, வெள்ளத்தால் வீடுகளை இழந்த 12 ஆயிரம் பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர் எனவும், முகாம்களில் உள்ளவர்களின் எண்ணிக்கை 38 ஆயிரத்துக்கும் அதிகமாக உள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.


# லண்டன் விமான நிலைய மேற்கூரையை பிய்த்து திடீரென கொட்டிய மழை நீர்!

லண்டனில் விமான நிலையத்தின் மேற்கூரையில் இருந்து மழை கொட்டி தீர்த்ததால், பயணிகள் அவதி அடைந்தனர்.

லண்டனில் உள்ள லூடான் விமான நிலையத்தில் திடீரென பயணிகள் சற்றும் எதிர்பாராத விதமாக, மேற்கூரையில் இருந்து , மழை கொட்டி தீர்த்தது. 15 நிமிடங்களுக்கும் மேலாக மேற்கூரையில் விரிசல் விழுந்து மழை நீர் ஒழுகியதால், தண்ணீர் தேங்கி சிறிய குளம் போல காட்சியளித்துள்ளது.

இதனால் விமான நிலையத்துக்குள் இருந்த பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். இந்த காட்சியை படம் பிடித்த பயணி ஒருவர் இணையத்தில் பதிவேற்றம் செய்ய, அது வேகமாக பரவியது.

இதையடுத்து லூடான் விமான நிலையம், பயணிகளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாக தனது அதிகாரபூர்வ டுவிட்டர் கணக்கில் பதிவிட்டது.



# 512 வயதுடைய உலகின் மிகவும் முதிர்ந்த சுறா வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் கண்டுபிடிப்பு!



512 வயதுடைய உலகின் மிக முதிர்ந்த சுறா கண்டுபிடிக்கப்பட்டு உள்ளமை விஞ்ஞானிகள் இடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

வடக்கு அட்லாண்டிக் சமுத்திர பகுதியில் மீனவர்கள் சமீபத்தில் மீன்பிடித்து கொண்டிருந்தனர். குழுவாக சென்ற 28 கிரீன்லாந்து சுறாக்களில் ஒன்று அவர்கள் வலையில் பிடிபட்டது. ஆய்வு செய்ததில் அதன் வயது 512 எனத் தெரிய வந்தது.


கிரீன்லாந்து சுறாக்கள் ஒரு வருடத்திற்கு ஒரு செ.மீ. அளவே வளரும். இவை பல நூறு ஆண்டுகள் வரை வளரும் தன்மை கொண்டவை. நிபுணர்கள் ஆய்வு செய்ததில் இதன் நீளம் 18 அடி என கண்டறியப்பட்டு உள்ளது. இதனடிப்படையிலும், ரேடியோ கார்பன் முறைப்படியும் இதன் வயது 272 முதல் 512 வரை இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சுறா பூமியில் மிக வயது முதிர்ந்த முதுகெலும்பு கொண்ட உயிரினம் ஆகும். இதனால் அமெரிக்க நாடு கண்டுபிடிக்கப்பட்டது, நெப்போலியன் போர்கள் மற்றும் டைட்டானிக் கப்பல் மூழ்கியது உள்ளிட்ட உலகின் பல முக்கிய நிகழ்வுகள் நடந்தபொழுது இந்தச் சுறா கடலில் சுற்றி வந்திருக்கக் கூடும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்தியாவில் அக்பர் வாழ்ந்த காலத்திற்கும் முந்தைய காலத்தில் இருந்து இந்த கிரீன்லாந்து சுறா வாழ்ந்து வந்துள்ளது.

இவற்றின் மீது நடத்தப்படும் ஆய்வு முடிவுகள் நீண்டகால பருவமாற்றம் மற்றும் மாசுபாடு ஆகியவற்றின் தாக்கங்கள் பற்றிய காரணிகளைக் கண்டறிய உதவும்.

அடுத்து இதன் மரபணுவை வைத்து ஆய்வு நடத்தப்பட உள்ளது. இதனால், ஏன் பெருமளவிலான உயிரினங்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை உயிர் வாழ்கின்றன என்பது பற்றியும், மனிதர்கள் உள்பட பல்வேறு இனங்களின் வாழ்நாளை எது தீர்மானம் செய்கிறது என்பது பற்றியும் விடை கிடைக்கக் கூடும் என கூறப்படுகிறது.

# ஏவுகணைச் சோதனைகளுக்காக வடகொரியத் தலைவர் தம்மிடம் மன்னிப்புக் கேட்டார் என்கின்றார் அமெ. அதிபர்



வொஷிங்டன், ஓக.14

ஏவுகணை சோதனைகளுக்காக வடகொரியத் தலைவர் தம்மிடம் கடிதம் மூலம் மன்னிப்புக் கேட்டார் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்திருக்கிறார்.

வடகொரியாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கொரிய எல்லையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியப் படைகள் இராணுவக் கூட்டுப் பயிற்சியைத் தொடங்கி நடத்தி வருகின்றன.

வடகொரியா இதனைக் கண்டிக்கும் வகையில் அண்மையில் அடுத்தடுத்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி அதிர வைத்தது.

இந்த ஏவுகணைச் சோதனைகள் அமெரிக்காவுக்கான எச்சரிக்கை என வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன் கூறினார்.

இதனால் வடகொரியா – அமெரிக்கா இடையே மீண்டும் மோதல் ஏற்படும் சூழல் உருவாகி இருக்கிறது. கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து பதற்றம் நீடிக்கிறது.

இந்த நிலையில் அண்மையில் நடத்தப்பட்ட ஏவுகணை சோதனைகளுக்காக வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன் தன்னிடம் மன்னிப்பு கேட்டார் என டிரம்ப் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் டுவிட்டரில் கூறியுள்ளவை வருமாறு:–



மூன்று பக்கங்களைக் கொண்ட அழகான கடிதம் கிம் ஜாங் அன்னிடம் இருந்து எனக்கு வந்தது. அந்தக் கடிதத்தில் அவர் அபத்தமான மற்றும் அதிக செலவுமிக்க கூட்டுப்பயிற்சி குறித்து புகார்களை தெரிவித்துள்ளார். அத்துடன் கூட்டுப் பயிற்சியை எச்சரிக்கும் விதமாக ஏவுகணை சோதனைகளை நடத்தியதற்காக மன்னிப்பு கோரினார். அதே சமயம் கூட்டுப்பயிற்சி எப்போது நிறுத்தப்படுகிறதோ அப்போது ஏவுகணை சோதனைகளும் நிறுத்தப்படும் என உறுதியளித்துள்ளார். அணு ஆயுதம் குறித்த பேச்சுக்காக என்னை மீண்டும் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.



# ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுவாரென கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார். இந்த அறிவிப்புக்கு முன்னதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் அன்றைய தினம் பிற்பகல் இடம்பெறுவதற்கு முன்னர் அமெரிக்காவின் மத்திய மற்றும் தென்னாசியாவிற்கான பதில் உதவி செயலாளர் அலைஸ் வெல்ஸ், கொழும்பிலுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிஸ்ட் மஹிந்த ராஜபக்சவைச் சந்தித்து இரண்டு மணிநேரம் உரையாடினர்.

கோட்டாபய ராஜபக்ஷவே ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவாரெனவும் பின்னணியில் அமெரிக்கா ஆதரவு என்றும் கூர்மைச் செய்தித் தளம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது.

திருகோணமலைத் துறைமுகம், முல்லைத்தீவில் இருந்து கிழக்குக் கடற்பகுதிகள், அங்குள்ள கனிய வளங்கள் போன்றவற்றை நோக்காகக் கொண்டே இலங்கை ஒற்றையாட்சி அரசுடன் சோபா எனப்படும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய அமெரிக்கா முற்படுவதாக உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன

மைத்திரி – ரணில் அரசாங்கத்தை 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உருவாக்கியதன் முக்கிய பங்குதாரராக அமெரிக்கா செயற்பட்டிருந்தாலும் அதன் பின்னரான சூழலில் கோட்டாபய ராஜபக்ஷவை அமெரிக்கா ஏன் முன்னிலைப்படுத்தியது எனவும் அந்தச் செய்திக் கட்டுரையில் கூறப்பட்டிருந்தது.

அத்துடன் இலங்கையில் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற பின்னரான சூழலில் முன்னாள் அமெரிக்கத் தூதுவர்

## சந்திரிகாவும் களத்தில் இறங்கி பல்வேறு தரப்புகளுடனும் பேச்சு

றெபோட் ஓ பிளேக் கடந்த மே மாதம் முதல் வாரம் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய போது கோட்டாபய ராஜபக்ஷவின் போர்க்காலச் செயற் பாடுகளைப் பாராட்டியிருந்தமை தொடர்பாகவும் கூர் மைச் செய்தித் தளத்தில் செய்திக் கட்டுரை ஒன்று வெளி யாகி இருந்தது.

இந்தோ –பசுபிக் பிராந்தியத்தில் பூகோள அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கும் நோக்கில் இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் பௌத்த பிக்குமார், கண்டி மகாநாயக்கத் தேரர்கள் ஆகியோரையும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிஸ்ட் சந்தித்து உரையாடியிருந்த விடயங்களையும் கூர்மைச் செய்தித் தளம் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவே ஜனாதிபதி வேட்பாளரென மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

1952 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இரண்டாம் திகதி எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து மகிந்த ராஜபக்ஷவுடன் சென்ற 54 உறுப்பினர்கள், 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இரண்டாம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சியை உருவாக்கியிருந்தனர்.

புலிகளை அழித்த பின்னர் அரசியல் தீர்வு முன்வைக்கப்படுமென அமெரிக்கா தம்மிடம் உறுதியளித்திருந்ததாகவும் ஆனால் எதுவுமே நடக்கவில்லை என்றும் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் சம்பந்தன் இலங்கை நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியிருந்தார். மைத்திரி – ரணில் அரசாங்கத்தை நம்பி இந்திய அரசுடன் கூடப் பேசுவதைத் தவிர்த்திருந்ததாக சட்டத்தரணி சுமந்திரனும் கூறியிருந்தார். இந்த நிலையிலேயே கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்க ஆதரவுடன் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுமுள்ளார்

மஹிந்தவின் சகோதரரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட இந்தக் கட்சியின் தவிசாளராக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் செயற்படுகிறார். இந்த நிலையிலேயே அதன் தலைவராக மகிந்த ராஜபக்ஷ தெரிவானார்.

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்தக் கட்சி இருநூறு சபைகளைக் கைப்பற்றி முதலாவது பிரதான சிங்கள அரசியல் கட்சியாக மாறியது.

இதன் பின்னணியிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மேலும் பல உறுப்பினர்கள் அந்தக் கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சியில் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இலங்கை அரசியலில் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளாகக் கடந்த எழுபது வருடங்களாக இயங்கின. ஆனால் 2016 ஆம் ஆண்டில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சமாந்தரமான பிரதான கட்சியாக மாறியுள்ளது.

1952 இல் பண்டாரநாயக்கா அமைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ராஜபக்ஷ குடும்பம் சமாதிகட்டியுள்ளதென கொழும்பில் கிண்டலாகப் பேசப்படுகின்றது.

இலங்கையின் மூன்றாவது அரசியல் சக்தியாகத் தங்களைத் தாங்களே மார்தட்டிய மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜே.வி.பி தற்போது நான்காம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான அரசியல் சூழலிலேயே பிரதான சிங்கள அரசியல் கட்சிகளுக்கு இந்த அவல நிலை ஏற்பட்டதெனலாம்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் ஆதரவோடு 2009 ஆம் ஆண்டு ஈழப்போர் இல்லாதொழிக்கப்பட்ட சூழலிலேதான் பூகோள அரசியல் போட்டிகளுக்குள் இலங்கை சிக்குண்டு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளும் சிதறுப்படும் நிலை உருவானது.

இவ்வாறு கட்சிகள் சிதறுப்படுவதற்கு ராஜபக்ச குடும்பமே காரணமென சிங்களக் கட்சிகளின் மூத்த உறுப்பினர்கள் குற்றம் சுமத்தி வந்தனர். இதன் பின்னரான சூழலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளப் புதுப்பிக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஆனால் தற்போது ஜனாதிபதியாகவுள்ள அந்தக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷ தரப்போடு இணைந்து போகும் சாத்தியங்கள் உள்ளமையால் சந்திரிகா மாற்று நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

2015 ஆம் ஆண்டு சேர்ந்து செயற்பட்டது போன்று ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளைத் தம் வசப்படுத்தும் ஜனாதிபதி வேட்பளார் ஒருவரைக் களமிறக்க சந்திரிகா முயற்சி எடுக்கிறார்.

ஆனால் கரு ஜயசூரிய சஜித் பிரேமதாச ஆகிய இருவருக்குமிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் சந்திரிகாவின் முயற்சிக்குப் பின்னடைவாகவுள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, கொழும்புத் துறைமுகம் மற்றும் வடக்கு – கிழக்கு தாயகப் பிரதேசங்களில் குறிப்பாக திருகோணமலைத் துறைமுகம், முல்லைத்தீவில் இருந்து கிழக்குக் கடற்பகுதிகள், அங்குள்ள கனிய வளங்கள் போன்றவற்றை நோக்காக் கொண்டே இலங்கை ஒற்றையாட்சி அரசுடன் சோபா எனப்படும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய அமெரிக்கா முற்படுவதாக உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகளை அழித்த பின்னர் அரசியல் தீர்வு முன்வைக்கப்படுமென அமெரிக்கா தம்மிடம் உறுதியளித்திருந்ததாகவும் ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் எதுவுமே நடக்கவில்லையென்றும் ஏமாற்றப்பட்டுள்ளதா



கவும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தன் கடந்த மாத இறுதியில் இலங்கை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

2015 இல் பதவிக்கு வந்த மைத்திரி – ரணில் அரசாங்கத்தை நம்பி இந்திய அரசுடன் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசுவதைத் தவிர்த்திருந்ததாக அதன் பேச்சாளர் சட்டத்தரணி சுமந்திரனும் அந்த விவாதத்தில் கூறியிருந்தார்.

புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்பதைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த பிரேரணை மீதான விவாதத்திலேயே சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் இவ்வாறு குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்த நிலையிலேயே கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவின் ஆதரவுடன் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுமுள்ளார்.

**நன்றி - கூர்மை**



# தமிழ் மக்களின் ஆதரவின்றி கோட்டாபய வெல்லமுடியாது!

## உறுதியுடன் கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி.

மட்டக்களப்பு, ஓக. 14

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவு இன்றி கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெற முடியாது. இதனால்தான், அவர் தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளார்.**

**– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

**மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தி யாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்களின் ஆதரவு இன்றி வெல்லுவேன் என்று கோட்டாபய ராஜபக்ஷ கூறினார் என செய்திகள் வந்தன. அதன் பின்னர், தான் அவ்வாறு சொல்லவில்லை என்று கூறினார். அவர் அப்படிக் கூறினாரா? இல்லையா? என்று எனக்குத் தெரியாது. தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவேற்றுவேன் என்று தனது நேற்றைய (நேற்றுமுன்தினம்) உரையில் கோட்டாபய சொல்லியிருக்கின்றார். தமிழ் மக்களின் ஆதரவு இன்றி நிச்சயம் வெல்ல முடியாது என்பதால்தான், முதலில் அப்படிக் கூறியிருந்தாலும் பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளார்.

கேள்வி:– ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக சஜித் பிரேமதாஸ, கரு ஜயசூரிய இருவரில் யார் போட்டியிட்டால், கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து வெற்றிபெறுவார் என்று நினைக்கின்றீர்கள்?

பதில்:–ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களைத் தீர்மானிப்பது அது உட்கட்சி விவகாரம். இதனை நாங்கள் தீர்மானிக்க முடியாது. அதில் தாக்கம் செலுத்தும்படியான கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க முடியாது.

கேள்வி:– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிப்பார்களா?

பதில்: – நாங்கள் யாரை ஆதரிப்பது? யாரை ஆதரிக்காமல் விடுவது? யாரையும் ஆதரிப்பதா? என்ற எந்தத் தீர்மானமும் இன்னும் எடுக்கவில்லை.

கேள்வி:– அவ்வாறென்றால் மஹிந்த அரசு வந்து விடக்கூடாது என்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கொண்டு வந்ததாக நீங்கள் பகிரங்கமாக அறிவித்திருந்தீர்கள். மஹிந்த சார்பான ஒருவரான கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க முடியுமா? இல்லையா? என்று தற்போது அழுத்தம் திருத்தமாக தெரிவிக்க முடியாதா?

பதில்: – அழுத்தம் திருத்தமாக நாங்கள்



சரியான நேரத்தில் சரியான ஒரு கருத்தை வெளியிடுவோம். அதற்கான நேரம் இப்போதில்லை.

கேள்வி:– உங்களது கோரிக்கைகளுக்கு கோட்டாபய ராஜபக்ஷ ஆதரவளித்தால் எத்தகைய நிலைப்பாடு எடுப்பீர்கள்?

பதில்:– நான் ஏற்கனவே சொன்னதைப் போன்று ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்ற தீர்மானங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக அனைத்துக் கட்சிகளும் தங்களுடைய வேட்பாளர்களை அறிவிக்கட்டும். எல்லாக் கட்சிகளும் தங்களின் கொள்கைகளை முன்வைக்கட்டும். நாங்கள் அனைத்து கட்சி வேட்பாளர்களுடனும் பேசுவோம். அதன் பின்னர் நிதானமான ஒரு முடிவை எடுப்போம்.

## தமிழ்ப் பழமொழிகள் தொகுப்பு பருத்தித்துறையில் வெளியீடு!





யாழ்ப்பாணம், ஓக. 14

பீற்றர் பேர்சிவல் பாதிரியாரால் 1843, 1874 ஆம் ஆண்டுகளில் தொகுத்து வழங்கப்பட்டிருந்த தமிழ்ப் பழமொழிகள்தொகுப்புநூலினைவிருபாகுமரேசன் மற்றும் அ.சிவஞானசீலன் ஆகியோரால் மீள்பதிப்பு செய்யப்பட்டுதமிழ்ப் பழமொழிகள் அகராதி தொகுப்பாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால்



வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி அரங்கத்தில் நடைபெற்ற இந் நிகழ்வு தமிழர் பாரம்பரிய முறைப்படி பிரதமவிருந்தினர்கள்அழைத்து வரப்பட்டு காலை 10.00 மணிக்கு ஆரம்பித்திருந்தது. பிரதம விருந்தினர்களால் மங்கல விளக்கின் சுடர்கள் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரி மாணவர்களால் தமிழ்த்தாய்வாழ்த்து பாடப்பட்டு வைபவ ரீதியாக நூல் வெளியீட்டு விழா ஆரம்பமானது.

பேர்சிவல் பாதிரியாரால் 1843 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்து பதிப்பாகவும், 1874 ஆம் ஆண்டில் தமிழகத்துப் பதிப்பாகவும் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டிருந்த தமிழ்ப் பழமொழிகளின் தொகுப்பாக இந்நூல் தொகுக்கப்பட்டு மீள் பதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜிபா சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள், கல்வி,விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான செயலாளர் இலட்சுமணன் இளங்கோவனும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி, ஹாட்லிக் கல்லூரி முதல்வர் த.முகுந்தன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் வட மாகாண இளைஞர் விவகார அமைச்சு என்பவற்றால் இந்நூல் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் புதுக்குடியிருப்பில் திறப்பு

முல்லைத்தீவு, ஓக. 14

முல்லைத்தீவு மாவட்டத்திற்குப் பயணம் மேற்கொண்ட பெருந்தோட்ட தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க புதுக்குடியிருப்புப் பிரதேச கமநல சேவைகள் திணைக்கள கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்தை திறந்து வைத்துள்ளார்.








முன்னதாக அலுவலகத்தின் பெயர்ப் பலகையைத்திரைநீக்கம்செய்துவைத்து தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்தை நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு தென்னை அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், புதுக்குடியிருப்பு பிர தேச செயலாளர் ம.பிரதீபன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## 79 கிலோ கஞ்சாவுடன் மூவர் கீரிமலையில் கைது

யாழ்ப்பாணம், ஓக. 14

காங்சேன்துறை கடற்பரப்பு ஊடாக எடுத்துவரப்பட்ட சுமார் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா 79 கிலோ கிராம் கஞ்சா கைப்பற் றப்பட்டுள்ளது. அதனைக் கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 3 பேர் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலையில் இடம்பெற்றது.

கீரிமலைப் பகுதியில் உள்ள பற்றை ஒன்றுக்குள் மறைந்திருந்து கடத்தலுக்குத் தயாரா கிய நிலையில் சந்தேகநபர் கள் கைது செய்யப்பட்டனர் என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையின் புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில் கடற்படையினருடன் இணைந்து போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் நடத்திய அதிரடி நடவடிக்கையால் இந்தக் கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தியாவிலிருந்து படகு மூலம் எடுத்துவரப்பட்ட கஞ்சா பொதிகள், கீரிமலைக்கரைக்கு எடுத்துவரப்பட்டு பற்றைக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்துள்ளது. அவற்றை வேறு இடத்துக்கு கடத்திச் செல்ல முற்பட்டபோது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் மன்னார், உடுத்துறை மற்றும் வெற்றிலைக்கேணிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கு காங்கேசன்துறை தலைமையகப் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.



# இந்திய அணிப் பயிற்சியாளர் இறுதிப் பட்டியலில் ஆறு பேர்

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கான இறுதிப் பட்டியலில் தற்போது ஆறு பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த நிலையில், பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் கடந்த 30ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இந்த நிலையில், தற்போதைய பயிற்சியாளர் ரவி சாஸ்திரி உட்பட, அவருடன் 6 பேர் பயிற்சியாளர் பதவிக்கான போட்டியில் உள்ளனர்.

ஐ.பி.எல்.லில் ஐதராபாத் அணியின் பயிற்சியாளராக இருக்கும் டொம் மூடி, நியூசிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் மைக் ஹெஸ்சன், மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர் பில் சிமோன்ஸ், இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் ரொபின் சிங், லால்சந்த் ராஜ்பூட் ஆகியோர் பயிற்சியாளராக விருப்பம் தெரிவித்து விண்ணப்பம் அளித்து உள்ளனர்.

கபில்தேவ், கெய்க்வாட், சாந்தா ரங்கசுவாமி அடங்கிய 3 பேர் கொண்ட குழு பயிற்சியாளரை தேர்வு செய்து வருகிறது.

இதேபோல பந்து வீச்சாளர் பயிற்சிக்கு வெங்கடேஷ் பிரசாத்தும், களத்தடுப்பு பயிற்சிக்கு தென்னாபிரிக்காவின் ஜோன்டி ரோட்ஸும் விண்ணப்பித்து உள்ளனர்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரோடு இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ரவி சாஸ்தரி, பந்து வீச்சு பயிற்சியாளர் பரத் அருண், துடுப்பாட்ட பயிற்சியாளர் சஞ்சய் பாங்கர், களத்தடுப்பு பயிற்சியாளர் ஆர் ஸ்ரீதர் ஆகியோரின் பதவிக்காலம் முடிந்தது.

எனினும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான தொடர் வரை அவர்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ணத்தை இந்தியக் கிரிக்கெட் அணி வென்றிருந்தால், ரவி சாஸ்தரி மற்றும் அவரின் உதவியாளர்களின் பதவிக்காலம் தொடர்ந்து நீடிக்கப்படிருக்கும்.

ஆனால் இந்தியா அணி, அரையிறுதி போட்டியில் தோல்வியடைந்ததால் அணி நிர்வாகம் மீது விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் பயிற்சியாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்களை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது.

இதனால் ரவி சாஸ்திரியும் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவருடன் துணைப் பயிற்சியாளர்களும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும். வரவேற்கப்படும் விண்ணப்பங்கள் அடிப்படையில் பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

ரவி சாஸ்திரி, பரத் ஸ்ரீதர், சஞ்சங் பாங்கர் ஆகியோர் மீண்டும் விண்ணப்பம் செய்தால் போதுமானது. அவர்களுக்கு தொடக்க நிலை தேர்வு நடத்தப்படாமல் நேரடியாக தேர்வுக்கான பட்டியலில் இடம் பிடிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷங்கர் பாசு, பிசியோ பாட்டிரிக் பர்கட் ஆகியோருக்குப் பதிலாக புதியவர்களை நியமிக்கவும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை திட்டமிட்டுள்ளது.

ரவி சாஸ்திரி கடந்த 2017ஆம் ஆண்டு இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக பதவி ஏற்றார். இவரின் பதவிக் காலத்தில்தான் இந்தியா அணி, ஆஸ்ரேலியா மண்ணில் முதன்முதலாக டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி வரலாற்று சாதனைப் படைத்தது.

இதேவேளை, இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் நபர் ஒருவர் குறைந்தது மூன்று வருடங்கள் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கும் அணியொன்றை பயிற்றுவித்திருக்க வேண்டும் என்பது, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தமது அணியின் பயிற்சியாளராக வரக்கூடிய நபருக்கு இருக்க வேண்டிய கட்டாய தகைமைகளில் ஒன்றாக குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம், பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் நபர் இரண்டு வருடங்கள் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணியொன்றை பயிற்றுவித்திருக்க வேண்டும் அல்லது மூன்று வருடங்கள் அங்கத்துவ நாடு ஒன்றினையோ அல்லது ஏ அணி ஒன்றினையோ பயிற்றுவித்திருக்க வேண்டும் என்பது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தமது தலைமை பயிற்சியாளராக வர விண்ணப்பிப்பவருக்கு இருக்க வேண்டிய வேறு தகுதிகளாக குறிப்பிட்டிருக்கின்றது.

அதேவேளை, குறித்த பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் நபர் குறைந்தது 30 டெஸ்ட் போட்டிகள் அல்லது 50 ஒருநாள் போட்டிகள் என்பவற்றிலும் விளையாடியிருக்க வேண்டும் என்பதும் முக்கியமான விடயமாகும்.

## ஸ்ரேயாஸ் ஐயருக்கு அணியில் நீண்ட காலம் வாய்ப்பு வேண்டும்



இந்தியக் கிரிக்கெட் அணியின் இளம் வீரரான ஸ்ரேயாஸ் ஐயருக்கு அணியில் நீண்ட காலம் வாய்ப்பு அளிக்க வேண்டும் என அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமான சுனில் கவஸ்கர் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியதன் பின்னணியில், அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்திய அணியில் பல ஆண்டுகளாக நிலவிவந்த நடுத்தரவரிசை துடுப்பாட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், ஸ்ரேயாஸ் ஐயரின் துடுப்பாட்டம் அமைந்திருந்தாக பல முன்னாள் வீரர்கள் அவரை வாழ்த்தி வருகின்றனர்.

அப்போட்டியில், இந்திய அணி தடுமாறிக்கொண்டிருந்த போது அணித் தலைவர் விராட் கோஹ்லியுடன் ஐந்தாவது வீரராக களமிறங்கிய ஸ்ரேயாஸ் ஐயர், 68 பந்துகளை எதிர்கொண்டு 1 சிக்ஸர் 5 பவுண்ரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். அத்தோடு, கோஹ்லியுடன் 125 ஓட்டங்களை இணைப்பாட்டமாகவும் பகிர்ந்தார்.

இந்த நிலையில் ஸ்ரேயாஸ் ஐயர் குறித்து சுனில் கவஸ்கர் கருத்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்,

ஒருநாள் போட்டியில் டோனியை போல் ரிஷப் பந்த் 5ஆவது அல்லது 6ஆவது வரிசையில் களம் இறங்க பொருத்தமானவர். அதிரடி துடுப்பாட்ட வீரரான அவருக்கு அந்த வரிசையில் போட்டியை வெற்றிகரமாக முடிக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது.

இந்திய அணி நல்ல தொடக்கம் கண்டு 40-45 ஓவர்கள் வரை தொடக்க வீரர்கள் நிலைத்து நின்றுவிட்டால் ரிஷப் பந்தை 4ஆவது வீரராக இறக்கலாம். 30 - 35 ஓவர்களில் களம் இறங்கும் வாய்ப்பு வந்தால் ஸ்ரேயாஸ் ஐயரை 4ஆவது வீரராக களம் இறக்க வேண்டும்.

அந்த மாதிரி தருணத்தில் ரிஷப் பந்தை 5ஆவது வீரராக களம் இறக்கலாம். மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான போட்டியில், ஸ்ரேயாஸ் ஐயர் தனக்கு கிடைத்த வாய்ப்பை நன்றாக பயன்படுத்திக் கொண்டார்.

5ஆவது வீரராக ஸ்ரேயாஸ் ஐயர் களம் கண்டாலும் அவருக்கு அணித் தலைவர் விராட் கோஹ்லியுடன் இணைந்து விளையாடும் வாய்ப்பு கிடைத்தது. அவர் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான போட்டியில், நிறைய பாடம் கற்று இருப்பார்.

மறுமுனையில் நிற்கையில் தான் கிரிக்கெட்டில் அதிகம் கற்றுக்கொள்ள முடியும். ஸ்ரேயாஸ் ஐயர், விராட் கோஹ்லி மீதான நெருக்கடியை போக்கும் வகையில் விளையாடினார். இந்த இன்னிங்ஸ் அவருக்கு நிலையான இடத்தை பெற்றுத்தரவில்லை என்றால் வேறு என்ன பெற்றுத் தரும் என்று எனக்குத் தெரியவில்லை.

இந்த போட்டிக்கு முன்பு விளையாடிய 5 போட்டிகளில் அவர் 2 அரை சதம் அடித்தார். ஸ்ரேயாஸ் ஐயருக்கு அணியில் நீண்ட காலம் வாய்ப்பு அளிக்க வேண்டும்என கூறினார்.

இதேபோல, ஸ்ரேயாஸ் அய்யர் நம்பிக்கை மிகுந்த வீரர் எனவும் அவரிடம் சரியான அணுகுமுறை இருக்கிறது எனவும் அவர் அணியின் உத்வேகத்தை தக்க வைத்ததுடன் எனது நெருக்கடியையும் குறைக்கும் வகையில் சிறப்பாகச் செயற்பட்டார் எனவும் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

## தன்னைத்தானே கிண்டல் செய்த சேவாக்! குவியும் ரசிகர்கள் பாராட்டு



டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப் பிட்டு சேவாக் தன்னைத்தானே கிண்டல் செய்தது ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு நடந்த இங்கிலாந்து தொடர் இந்திய அணிக்கு பெரும் சவாலாக இருந்தது. இந்த தொடரில் முதல் 2 டெஸ்ட் போட்டிகளில் ஆடாத சேவாக், 3ஆவது போட்டியில் விளையாட பார்மிங்ஹாம் வந்தார். ஆனால் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் 'டக்' அவுட் ஆனார்.

முதல் ஆட்டத்தில் ஸ்டூவர்ட் பிராட்டும், 2ஆவது ஆட்டத்தில் அண்டர்சனும் சேவாகை 'டக்' அவுட் செய்தனர். இந்த டெஸ்ட்டில் இந்திய அணி 224 ரன்களுக்கு முதல் ஆட்டத்தில் மடிந்தது. இங்கிலாந்து அணி, இந்திய அணி வீரர்களை அலைக்கழித்து 710/7 என்ற உயர் ஸ்கோரை எட்டியது.

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை ஆராய வேண்டுமெனக் கூறுவது அர்த்தமற்றது.

அது, ஒரு வகையில் இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் நலன்களுக்காக மற்றைய தமிழ் கட்சிகளைப் பயன்படுத்துவதையும் மக்களை முட்டாள்களாக்குவதையும் இலக்காகக் கொண்ட ஒரு பொய்யான முயற்சியாகவே அமையும். இதனால் தமிழ் மக்களுக்கு ஆகப் போவது ஒன்றுமில்லை. எனவே மக்களை முட்டாள்களாக்க நாங்கள் விரும்பவில்லை.

- மேற்கண்டவாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் கூறியுள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறுகையில் –

சிங்கள,பௌத்த தேசியவாதம் தமிழ் மக்களுக்கான தீர்வை விரும்பி வழங்கப்போவதில்லை. தீர்வை வழங்குவதற்கான நிர்ப்பந்தங்களை நாம் விதிக்கும் போதே எமக்கான தீர்வு சாத்தியமாகும். அந்தவகையில் கடந்த 5 வருடங்களில் பல பேரம் பேசும் சந்தர்ப்பங்கள் மக்கள் ஆணை பெற்றவர்களுக்குக் கிடைத்த போதும் அவர்கள் அதனை பயன்படுத்த தவறியுள்ளார்கள்.

அல்லது பேரம் பேசும் சந்தர்ப்பத்தை இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் நலன்களுக்காகப் பயன்படுத்தினார்கள். மாறாக, தமிழ் மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தவில்லை. அதுவே தமிழ்தேசத்தின் இருப்பை அழித்திருக்கின்றது. தேர்தல்கள் பேரம் பேசுவதற்கான சிறந்த சந்தர்ப்பங்கள். அவற்றைச் சரியாகப் பயன்படுத்தாமல், 13ஆம் திருத்தச்சட்டத்தை அரசமைப்பின் முக்கிய இடத்தில் இடம்பெறச்செய்யும் வகையில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கமுயற்சித்தார்கள்.

மைத்திரிபால சிறிசேனாவை மகாத்மா காந்தி என்றார்கள், நெல்சன் மண்டேலா என்றார்கள். அதனை நம்பியே மக்கள் வாக்களித்தார்கள். ஆனால் இன்று ஏமாற்றப்பட்டோம் என ஒப்பாரி வைக்கின்றனர்.

உண்மையில் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுடைய நலன்சார்ந்து ஒரு தீர்மானம் எடுக்கவேண்டுமானால் அல்லது இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் நலன்களுக்கு சாதகமாக செயற்படக்கூடிய ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக இருந்தால், அதற்கு முன்னர் தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும் வகையில் இந்திய நாடாளுமன்றில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றச் செய்யட்டும். அதன் பின்னர் பேசலாம். - என்றார்.

## ஐ.நாவின் கூட்டத்துக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளின் தலைவர்களுடன் முக்கிய சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

செப்டெம்பர் 17 முதல் 27 வரை நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் செல்லும் ஜனாதிபதி தன்னுடன் முக்கியமான அமைச்சர்கள் சிலரையும் அழைத்துச் செல்லவுள்ளார்.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்குவது உட்பட முக்கியமான விடயங்கள் குறித்தான தனது நிலைப்பாட்டை அவர் ஐ.நா. பொதுச்சபையில் வெளிப்படுத்துவாரென அறியமுடிந்தது.

## தீர்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாடு குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிகள் தொடர்பிலான பேச்சுக்கள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ஆனால், இறுதி முடிவு எதனையும் பல கட்சிகள் இன்னமும் அறிவிக்காத நிலையே உள்ளது.

குறிப்பாக பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபாய ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டிருக்கின்றார். அதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இன்னமும் இறுதியான முடிவு எட்டப்படவில்லை. அக்கட்சி எவரையும் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. .

ஆகவே, பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு, அவர்களது நிலைப்பாடுகள் யாது என்பதை அவர்கள் வெளிப்படுத்தியபின்னரே எங்கள் முடிவுகளை நாம் அறிவிக்க முடியும். ஆகையினால்தான் இதுவரையில் நாம் எந்தவிதமான முடிவுகளையும் எடுக்கவில்லை. ஆனால் உரிய நேரத்தில், உரிய முடிவை எடுத்து அறிவிப்போம்.

குறிப்பாக இந்தத் தேர்தலில் போட்டியிடுபவர்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யார் இணங்குகின்றாரோ அல்லது அந்த நம்பிக்கையை யார் வழங்குகின்றனரோ அவருக்கு ஆதரவு வழங்கலாம். அதனை விடுத்து இவை எதனையும்செய்ய மாட்டாரென்று தெரிந்த ஒருவருக்கு எவ்வாறு ஆதரவை வழங்க முடியும்?

இந்தத் தேர்தலை நம் பகிஷ்கரித்து ஒதுக்கவும் முடியாது. தேர்தலை பகிஷ்கரிப்பது என்பது பல்வேறு பாதிப்புக்களையே ஏற்படுத்தும்.

ஆகவே போட்டியிடும் சகல வேட்பாளர்களுடனும் கலந்துரையாடி அவர்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய வரும், அதற்கான நம்பிக்கையை வழங்குகின்றவருமான ஒருவருக்கே நாம் ஆதரவை வழங்கலாம். அதனடிப்படையில் எமது கட்சியின் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த காலங்களில் செய்தமை போல – எந்த விதமான பேச்சுக்கள் அல்லது நிபந்தனைகள் இல்லாமல் ஆதரவை வழங்கிவிட்டு, பின்னர் வந்து அவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று வந்து கூறுமாற்போல் – நாம் நடந்து கொள்ளமுடியாது. அப்படி வந்து கூறுவதில் அர்த்தமில்லை. – என்றார் அவர்

## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டார். இந்த நிகழ்வுகளில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.

நேற்று மாலை கண்டிக்கு சென்ற கோட்டாபய அங்கும் வழிபாடுகளில் ஈடுபட்டார். கண்டி பிள்ளையார் கோவிலுக்கும் அவர் சென்றார்.

## வரும் ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– எனத் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் ஆஸாத் சாலி தெரிவித்தார்.

மஹிந்த அரசாங்கத்தின் கொலைஞர்களையும் கொள்ளையர்களையும் சிறையில் அடைப்பதற்கு மைத்திரிபால – ரணில் அரசுக்கு இன்னும் போதுமான காலம் இருப்பதாகவும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை இந்த அரசு எஞ்சியிருக்கும் நாள்களிலாவது நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் கோரினார்.

கொழும்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் இல்லாது கோட்டாபயவினால் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. மொட்டு கட்சியினர் மஹிந்தவை நிறுத்தினாலும் மண் கௌவியே தீருவர். பெரும்பான்மையின வாக்குகள் மூன்று பெரும்பான்மையினக் கட்சிகளுக்கும் பிரிந்து செல்லும். எனவே மொட்டுக் கட்சியினர் பெரும்பான்மையின வாக்குகளை மட்டும் நம்பித் தேர்தலில் வெற்றி பெறலாம் என்று கனவு காண்கின்றனர்.

கடந்த அரசாங்கத்தின் கள்வர்களும், ஊழல்வாதிகளும் இணைந்து தோற்றுவித்த இந்த மொட்டுக்கட்சியில் ஜனநாயகத்தை எவ்வாறு எதிர்பார்ப்பது? கடந்த ஆட்சியில் சட்டத்தை மதிக்காது, நீதிக்கு தலைவணங்காது செயல்பட்ட கோட்டா , விமல் வீரவன்ஸ போன்றவர்களின் நடவடிக்கைகளை மக்கள் மீண்டும் நினைத்துப் பார்க்கின்றனர். ஊடகவியலாளர்களான லசந்த, எக்னலிகொட, கீத் நோயர் மற்றும் றகர் வீரர் தாஜுதீன் ஆகியோரைத் துடிக்க துடிக்கக் கொன்ற – காயப்படுத்திய – குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வரத் துடிக்கின்றது.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், பொருளாதார அமைச்சர், அத்துடன் எதிர்கால அரசியல் வாரிசையும் ஒரே குடும்பத்துக்குள் வைத்து கொண்டு மீண்டும் கொள்ளையடிக்க ஆயத்தமாகின்றனர். மக்களின் வாக்குகள் மீண்டும் தேவையானால் ஒட்டு மொத்தக் குடும்பமும் முன்வந்து, ஊடகவியலாளர் மாநாட்டில் நாங்கள் சுத்தமானவர்கள் என்று சொல்ல வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டார் என நான் அடித்து கூறுகின்றேன். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாரிய அழுத்தத்தின் பேரிலேயே இவரது பெயரை அறிவித்தார். இந்த அறிவிப்பின் போது மகிந்த ராஜபக்ஷ 'கோ..' எனக்கூறும்போது, நாடு முழுவதும் வெடிகள் போட வேண்டும் என நாடகம் அரங்கேற்றியவர்கள் விமல் வீரவன்ஸ போன்றவர்களாவர் – இவ்வாறு ஆசாத் சாலி மேலும் தெரிவித்தார்.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

அண்மையில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 'வழமையாக முற்பகல் 9.30 மணிக்கு அமைச்சரவை கூடிய நிலையில் தற்போது முற்பகல் 7.30 மணிக்கு கூடுகின்றது. இதன்போது, ஐந்து – ஆறு அமைச்சர்களே வருகை தருகின்றனர். இதனைப் பார்க்கும்போது, பகல்பொழுது வரை உறங்குபவர்கள் நாட்டில் எத்தனை பேர் உள்ளார்கள் என்பது விளங்குகின்றது.' – என்று கூறியிருந்தார்.

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் நல்லூர் ஆலய வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மூன்று முஸ்லிம் இளைஞர்கள் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி மற்றும் முழங்காவில் பகுதிகளை சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் மூவரே நேற்றிரவு 10 மணியளவில் ஆலய வீதியில் நடமாடியதனால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## நல்லூர்ப் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என். சிறிகாந்தா நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நல்லூர் முருகன் ஆலய வருடாந்த உற்சவம் நிகழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், அநாவசியமானதும் அளவுக்கு மிஞ்சியதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, வழிபாட்டுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அர்த்தமற்ற கெடுபிடிகளுக்கு ஆளாக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

கடந்த சித்திரை மாதம் நிகழ்த்தப்பட்ட இஸ்லாமிய தீவிரவாத தாக்குதல்களின் அனுபவப் பின்னணியில், ஆயிரக்கணக்கில் மக்கள் கூடும் நிகழ்வுகளில் முன்னெச்சரிக்கையுடன் கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவையாக உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், இத்தகைய ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் சாத்தியமான அளவில் மக்களை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் அசௌகரியங்களுக்கு உட்படுத்தாத முறையில், செயற்படுத்தப்பட வேண்டும் என்பது அவசியமானது.

அதே நேரத்தில் கடும் இறுக்கமாக வடிவமைக்கப்படும் எந்தவொரு பாதுகாப்பு ஏற்பாடும் ஊடுருவப்பட முடியாதது என்று நூற்றுக்கு நூறு வீதம் எவரும் உறுதியளிக்க இயலாது என்பதும் உலகறிந்த உண்மையாகும்.

நல்லூர் முருகன் ஆலய உற்சவ காலத்தைப் பொறுத்த மட்டில், பாதுகாப்பு நடவடிக்கைகளை, வழக்கம் போல காவல் துறையினரே, நவீன கருவிகளின் உதவியுடன் நாகரிகமான முறையில் தாராளமாக மேற்கொள்ள முடியும்.

இந்த நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருப்பதும், கணிசமான எண்ணிக்கையில் ஆலயச் சுற்றாடலில் நிலை கொண்டிருப்பதும், தேவையற்றது என்பதோடு, பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற தொடர் விவகாரத்தை, நல்லூர் ஆலய உற்சவம் தொடர்பில் ஊதிப்பெருப்பிக்கும் ஒரு நடவடிக்கையாகவே தோற்றமளிக்கின்றது.

மக்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளித்து கெடுபிடிகள் கலந்த பாதுகாப்புச் சோதனைகளை மறுசீரமைத்து, காவல்துறையினரின் கரங்களில் முழுமையாக அவற்றை ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் நாம் கோருகின்றோம். – என்று உள்ளது.

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளார் என, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நாளை ஒகஸ்ட் 15ஆம் திகதி தொடக்கம், 26ஆம் திகதிவரை, இவர் இலங்கைக்குப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான உரிமையை அனுபவிப்பதில் மக்கள் எதிர்கொள்ளும் தடைகளை, ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் அடையாளம் காணுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

மத அல்லது நம்பிக்கை சுதந்திரம் தொடர்பான ஐ.நாவின் முன்னைய சிறப்பு அறிக்கையாளர் அஸ்மா ஜஹாங்கீர் 2005ஆம் ஆண்டு, இலங்கைக்குப் பயணத்தை மேற்கொண்ட பின்னர், முன்வைத்த பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும் அவர் ஆராயவுள்ளார்.

இவர் தனது 12 நாள் பயணத்தின் போது, அரச பிரதிநிதிகள், மத அல்லது நம்பிக்கையைப் பின்பற்றும் சமூகங்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகள், ஐ.நா அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடுவார்.

இவர் தனது பயணம் தொடர்பான அறிக்கையை அடுத்த ஆண்டு மார்ச் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கவுள்ளார்.

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடம் ஒருபோதும் ஆட்சியை ஒப்படைக்காது.

– இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து பதுளையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அரங்கேறிய ஊடகவியலாளர்கள் படுகொலை, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் கற்பழிப்பு மற்றும் வெள்ளை வான் கடத்தல்களை மறந்துவிட முடியாது.

இன்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் புகழ் பாடுபவர்கள் ராஜபக்ஷ அரசின் முறைகேடுகளை மீள நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

குடும்ப ஆட்சியை இல்லாதொழித்து, ஜனநாயகம் மிக்க அரசைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது. இதனை இலக்காகக் கொண்டே ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றி ஜனநாயகத்தை அனைவருக்கும் பொதுவுடமையாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒருபோதும் ஆட்சியை ஒப்படைக்காது. நிச்சயம் மீண்டுமொரு அரசியல் பின்னடைவை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி எதிர்கொள்ளும் – என்றார்.

# கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகப் போர் தொடுக்க மைத்திரியின் முடிவுக்குக் காத்திருக்கும் குமார வெல்கம!

கொழும்பு, ஒக்.14

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானம் வெளியானபின்னரே எனது நிலைப்பாட்டை அறிவிப்பேன். – இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான குமார வெல்கம தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ களமிறக்கப்பட்டால் பொது எதிரணிக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என குமார வெல்கம திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.

அத்துடன், கோட்டாபய சர்வாதிகாரி என்றும், இலங்கைக்கு இராணுவ ஆட்சி தேவையில்லை என்றும்கூட அவர் கருத்து வெளியிட்டிருந்தார். கோட்டாவால் வெற்றி பெற முடியாது எனவும் அவர் அடித்துக் கூறியிருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசியும் ராஜபக்ஷ குடும்பத்தின் உறவினருமான குமார வெல்கமவின் இத்தகைய கருத்துகள் பொது எதிரணிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தின.

இதனால் பொது எதிரணியின் பதுளை மாவட்டத் தலைவர் பதவியிலிருந்து அவர் அதிரடியாக நீக்கப்பட்டார்.



இதனையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பக்கம் மீண்டும் சாய்ந்த குமார வெல்கம, மைத்திரிக்கு ஆதரவாகப் பரப்புரைகளில் ஈடுபட்டார்.

இந்தநிலையில், தற்போது ஜனாதிபதி வேட்பாளராகக் கோட்டாபயவின் பெயரை மஹிந்த அணி அறிவித்துள்ளது. எனவே, இது தொடர்பில் தங்கள் நிலைப்பாடு என்னவென குமார வெல்கமவிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் –

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரின் தீர்மானத்தை அறிவிக்கும்வரை காத்திருக்கின்றேன். அதன்பின்னரே எனது முடிவை அறிவிப்பேன்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சரியான முடிவை எடுத்தால் அவருடன் இருப்பேன். அவரால் எடுக்கப்படும் முடிவுடன் எனக்கு இணக்கப்பாடு இல்லையேல் இணைந்து பயணிக்கமாட்டேன் – என்றார்.

## மஹிந்த,நாமல் உட்பட 60 எம்.பிக்ளுக்கு கல்தா கொடுக்க மைத்திரிபால தீர்மானம்?

மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ உட்பட 60 பேரின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானம் எடுத்துள்ளார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்களை மேற்கோள்காட்டி சில் செய்திகள் வெளியாகியுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டமையைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாம்..

கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கான பெயர் பட்டியல் மற்றும் அவர்களுக்கு பதிலாக தேசிய பட்டியல் ஊடாக நியமிக்கப்படும் உறுப்பினர்கள் தொடர்பான விவரங்கள் தயார் நிலையில் உள்ளன.

இரண்டு பெயர் பட்டியல்களும் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீரவினால்தேர்தல்கள் ஆணையாளரிடம் ஒப்படைக்கவுள்ளன என்றும் கூறப்படுகிறது.

தற்போது நாடாளுமன்றத்தில் உள்ள 95 சுதந்திர கட்சி உறுப்பினர்களில் 60 பேர் பொதுஜன பெரமுனவிற்கு சென்றுள்ளனர்.

வேறு கட்சியில் உறுப்புரிமை பெற்றால் தற்போது இருக்கும் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்குவதற்கு அந்த கட்சிக்கு அனுமதியுள்ளதுடன், அதனடிப்படையில் அவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமையையும் இரத்து செய்வதற்கு சந்தர்ப்பம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.





## ஹோமாகமவில் திங்களன்று ஒரே மேடையில் ரணில்–சஜித்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஹோமாகமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கலந்துகொண்டுள்ளார்.

'அனைவருக்கும் வீடு' எனும் அரசாங்கத்தின் வீட்டுத் திட்டத்தின் கீழ் ஹோமாகம ஜல்தர ரணல பிரதேசத்தில் மத்திய தர வர்க்கத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்விலேயே அவ்வாறு இருவரும் இணைந்து கலந்துகொண்டுள்ளனர்.



ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இவர்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு உக்கிரமடைந்துள்ள நிலையில் இரு தலைவர்களும் ஒரே மேடையில் சந்தித்துள்ளமை அரசியல் தரப்பில் முக்கிய ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.

## ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளரைத் தான் கூட்டமைப்பு இம் முறையும் ஆதரிக்கும்

### அதில் சந்தேகம் இல்லை என்கிறார் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, ஒக்.14

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளரை தான் ஆதரிக்கப் போகிறது. புதுடில்லியில் சம்பந்தன் இராஜதந்திரிகளுடனும் பேச்சு நடத்துவார் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

கூட்டமைப்பினுடைய தலைவர் சம்பந்தன் ஐயா தனது மருத்துவ சிகிச்சைக்காக புதுடில்லி சென்றிருக் கின்றார். ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள இந்த பரபரப்பான சூழ்நிலையில் அவருடைய மருத்துவ சிகிச்சை மட்டுமல்ல, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆத ரிப்பது போன்ற விடயம் தொடர்பிலும் இராஜதந்திரிகள் மட்டத்தில் நிச்சயமாக பேசப்படும் என்று நான் நினைக்கின்றேன். 2015 ஆம் ஆண்டு இதே மாதிரியான ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடைபெற இருந்த இறுதிக் கட்டத்தில் இரண்டு வார காலம் சம்பந்தன் ஐயா சென்னையில் தங்கியிருந்தார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, மைத்திரிபால சிறி சேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோ ருடன் பொது வேட்பாளர் தொடர்பில் சில பேரம் பேசல்கள் இடம்பெற்றன. அவை தமிழ் மக்களுடைய நலன் சார்ந்த பேரம் பேசல்கள் அல்ல. தங்களுடைய தனிப்பட்ட நலன்கள் சார்ந்த பேரம் பேசல்களே நடைபெற்றன. இரண்டு வருட காலம் அங்கி ருந்து தபால் மூல வாக்கெடுப்பு நடைபெற்று மறுநாள் இங்கு வந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினுடைய நான்கு பங்காளிக் கட்சிகளும் கொழும்பு ஜானகி ஹோட்டலில் வைத்து பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாக கூறப்பட்டது.

தமிழ் மக்களது அரசியல் உரிமைகள் குறித்து கடந்த தேர்தலில் பேரம் பேசலை தவிர்த்து தனிப்பட்ட நல னுக்காக பேரம்பேசல்கள் நடை பெற்று அதற்கு சில பிரதி உபகாரங்களும் செய்யப்பட்டன. தனிப்பட்ட பேரம் பேசல்களும், சுயநலங்களும் தமிழ் மக்களை நட்டாற்றில் விட்டுள்ளன. அந்த ஜனாதிபதி தேர்தலில் அன்றிருந்த இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடனும், ஜனாதிபதி வேட்பாளர்களுடனும், எங்களுடைய மக்களின் நலன்சார்ந்து ஓர் உறுதிமொழியோ, உத்தரவாதமோ பெற்றுக் கொள்ளவில்லை. அப்படியொரு உடன்படிக்கை செய்வது குறித்து கேட்டபோது ஜனாதிபதி அதனை மறுத்திருந்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் இருக்கின்ற வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவையோ அல்லது சஜித் பிரேமதாஸவையோ தான் நிச்சயமாக ஆதரிக்கப் போகிறது. கடந்த நான்கரை வருட காலமாக இவர்களுக்கு தமிழ் மக்கள் வழங் கிய ஆதரவுக்காக இவர்கள் ஐ.நா மனிதவுரிமை பேரவையையும், இலங்கையில் இருக்கின்ற ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஏமாற்றியிருக்கிறார்கள். நான்கரை வருடங்களாக பிரதமர், ஜனாதிபதியும் ஏமாற்றி விட்டார்கள் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவித்துள்ளனர். இவ்வாறு கூறிக்கொண்டு மீண்டும் இதே ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளரைத் தான் இவர்கள் ஆதரிக்கப் போகிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரை கடந்த தேர்தலில் உங்கள் தனிப்பட்ட நலனுக்கு பேரம் பேசியது போன்று அதாவது பணத்திற்காக நீங்கள் பேரம் பேசுவீர்களாகவிருந்தால் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் இவர்கள் அனைவரும் நிராகரிக்கப்படுவார்கள். ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவதாக இருந்தால் தமிழ் மக்களது அரசியல் தீர்வு தொடர்பாகவும், தேர்தல் காலத்தில் வழங்கப்படுகின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் வேட்பாளர்களிடத்தில் சரியான உறுதிமொழியைப் பெற்றுக் கொள்வதுடன் நில்லாது சர்வதேச இராஜதந்திகளிடம் இருந்தும் உறுதிமொழியை பெற வேண்டும். இதை விடுத்து கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செய்ததைப் போன்று நடந்து கொண் டால் அதற்குரிய விளைவை அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களிடம் இருந்து இவர்கள் பெற்றுக் கொள்வார்கள் எனத் தெரிவித்தார்.

## மைத்திரி — கோட்டா சேர்ந்து நின்றால்தான் சு.க. நிமிரலாம்!

### இப்படிக் கூறுகிறார் டிலான்

கோட்டாபயவும் மைத்திரியும் சேர்ந்து நின்றால் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யைத் தலைநிமிரச் செய்ய முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க வின் தலைவராக சஜித்தை கொண்டுவர முயன்று தோற்றுப் போன தயாசிறி, தற் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் சீர்குலைக்க முயல்கின்றார். அதனால் ஐ.தே.க வுக்கு எதிரான பொதுஜன பெரமுனவின் மாநாட்டுக்கு சென்ற எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் துடிக்கின்றார்.

தயாசிறி ஜயசேகர நிர்வாணமாய் இருப்பதை மக்கள் அறிவார்கள். ஆகவே, அவ்வாறானவர்களுக்கு மக்கள் மிக விரைவில் விடையளிப்பார்கள். அதனால்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், கோட்டாபயவும் சேர்ந்து நின்றால் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தலை நிமிரச் செய்ய முடியும் எனக் கூறிக்கொள்கின்றேன். – என்றும் அவர் கூறினர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2019 இல் வெளியிடப்பெற்றது.